

411. ஸ்ரீமதி இலங்கை

தென்றற் காற்றையும் வான ஒளியையும் இசைத்துச் செய்த இசைச் சித்திரங்கள் ஆகிறது யட்சகுல தேவியரின் காதல்,—விரகதாபம். ராவணனுடைய ராட்சஸ மனைவியரின் காதலோ, இடியும் புயற் காற்றும் கள்ளும் தீயும் கலந்த மன்மதாவஸ்தை.

காட்சி 1

சில மாளிகைகளில் நெருப்பு எரிவது போலத் தோன்றுகிறது. மாணிக்கங்களின் செந்நிற ஒளிதான். அங்கே தோழியர் உறங்கிப் போக, ஆசையும் தாமுமாய் ஒதுங்கியிருந்து தங்கள் உள்ளத்துடனேயே ஊடல் - சண்டை போடுகிறவர்களைப் பார்க்கிறோம்.

என்? 'அவர் உபேட்சித்திருக்க நீ மாத்திரம் அவரை நாடுவதென்ன?' என்று தங்கள் மனத்தோடு தாமே குஸ்தி போடுகிறார்களாம், தம் நிழலோடு தாமே போரிடுவோர் போல.

காட்சி 2

வேறு சில மாளிகைகளில் அக்கினிச் சுவாலை போல் செம்பட்ட மயிர்க் கூந்தலே ஜொலிக்கிறதாம். அதிலே புகை சூழ்ந்தாற்போல மொய்க்கின்றன வண்டுகள். இப் பெண்கள் தங்கள் படுக்கையையே பகையாகக் கொண்டு அதைச் சுருட்டி அப்பால் தள்ளி விடுகிறார்கள்.

தள்ளி விட்டு, ஸ்படிகக் கல்லினாலமைந்த வெறுந்தரையில் போய்ப் படுத்துப் புரண்டு உருண்டு தவிக்கிறார்களாம்.

உள்ளத்துடன் போர்; படுக்கையோடு போர்! இனி வேறொரு போர்க் காட்சி பார்க்கலாம்.

காட்சி 3

சூது போர்க் காட்சி. முன்பு ராவணன் நாக ராஜாக்களிடமிருந்தும் வித்தியாதர வேந்தர்களிட மிருந்தும் பலாத்காரமாய்க் கவர்ந்து கொண்டு வந்து தங்களுக்குப் பரிசாக அளித்திருந்த நாகரத்தின கிரீடம் முதலியவற்றைச் சில ராட்சஸப் பெண்கள் பந்தயமாக வைத்துச் சூதாடுகிறார்களாம் :

மன்னவர் முடியும்
 பூணும் ஆரமும்
 பணய மாகப்
பொன்னணி பலகை
 சூது, துயில்கிலர்,
 பொருகின் றுரும்...



கள் குடித்த கள் விசேஷமாய்க் காரமேற்றிய கள்.

தேன் கொட்டின மாதிரி இருக்கும் நாட்பட்ட கள் என்பது கள்ளுக் காதலர் கருத்து. நமது கவிஞனே 'கொடிய நாகக் கள்' என்ற அளவிறந்த வெறி தரும் கள் வகையையும் ராவணனுடைய ராட்சஸ மனைவியர் பருகிப் பித்தர் போல் பிதற்றத் தொடங்கிய தாகக் குறிப்பிடுகிருன்.

இனி, பக்தராகப் பிதற்றும் ஒரு காட்சியும் காண்போம்.

[பூணும்–(பொதுவாக) ஆபரணங்களும். ஆரமும் – (விசேஷமாக) முத்தாரங்களும். பணயம்–பந்தயம். பொன் அணி பலகை–பொன் மயமான அழகிய பலகை. சூது பொருகின்ருரும் – சூதாடுகிறவர்களும்.]

காட்சி 4

ஊர் ஓய்ந்திருந்த போதிலும் இவர்களுக்கு ஓய்வுமில்லை, உறக்கமும் இல்லை. 'குடியாத பொழுது விடியாது' என்று கருதியவர் போல் கள்ளைக் குடித்துப் பொழுதுபோக்க விரும்பினர்கள். சுழலும் கண்களுடன் தோழியரோடு கைகோத்துக் கூத்தாடிக் கொக்கரிக்கிருர்கள், விரகதாபத்தை மறக்க. இவர்

காட்சி 5

கள்ளை உள்ளே தள்ளி அறிவை வெளியே தள்ளுகிருர்கள் குடியர்கள் என்று சாதாரணமாய்ச் சொல்லுகிறோமே,— இவர்களா தள்ளுகிருர்கள்? உள்ளே புகுந்த கள்ளரக்கனே கழுத்தைப் பிடித்து அறிவை வெளியே தள்ளி விடுகிருனும். கள்ளும் அறிவும் தான் காதலிப்பதில்லையே!

இப்படிப்பட்ட 'ஒத்துழையாமை' யோடு ஆஸ்திக புத்தி ஒத்துழைக்கிற அதிசயத்தைப் பாருங்கள்! அதனல் தானே, 'என் மேல் தெய்வம் ஆவேசித்து விட்டது!' என்றெல்லாம் அட்டகாசம் செய்கிருர்கள்?

தயிர் நி..த்(து) உறுகள்
உள்ளம் தள்ளுற
அறிவு தள்ளிப்,

பயிர்வுறத், 'தெய்வம்
எனமேல் படிந்தது
பார்மின்!' என்று,
உயிர்உயிர்த்(து), இரண்டு
கையும் உச்சிமேல்
உயர நீட்டி,
மயிர்சிலிர்த்(து), உடலும்
கூசி, வாய்விரித்(து),
ஒடுங்கு வாரும்...

[நிறத்து உறு கள் — நிறம் பொருந்திய கள். பயிர்வு — ஆரவாரம். பார்மின் - பாருங்கள். என்று - என்று சொல்லிக் கொண்டு. உயிர் உயிர்த்து — பெருமூச்சு விட்டு.]

முகமும் முகமூடியும்

இப்படிக் கள்ளுத் தெய்வத்தின் ஆவேசமும் அனுக்கிரகமும் பெற்று உடல் கூசி ரோமம் சிலிர்க்க வாய் விரித்து ஓவென்றலறிப் பின்பு 'அக்கடா' வென்று ஒடுங்கி ஓய்ந்து போகும் அரக்கியர்-நிலையிலே ராட்சஸ இலங்கையின் திருமுக விலாஸம் தென்படுகிறதல்லவா?

இத் தலைநகரத்தின் முகமூடிதான், அழகும் கலையும் கலாசாரமும் நாகரிகமும். இம் முகமூடியைத் தான் எப்படி மெருகிட்டு அலங்காரஞ் செய்து வைத்துக் கொண்டிருக்கிறது இந்த அரக்கர் பேரூர்!

ஜாவாவின் தலை நகரமாகிய படாவியாவைக் குறிப்பிடும்போது ரவீந்திரநாத தாகுர், 'ஸ்ரீமதி படாவியாவுக்கு உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை அலங்காரத்திற்குக் குறைவில்லை' என்கிறார். 'சோப்புத் தேய்த்து வாசனை பூசி மேனிப் பொலிவை விருத்தி செய்கிறாள்' என்றும் கூறியுள்ளார். ஸ்ரீமதி இலங்கையோ, வானவர் மகளிர் ஆகாய கங்கையில் மஞ்சன மாட்டவும் கோலம் செய்யவும் மேனிப் பொலிவை விருத்தி செய்கிறாள்!

ஆனால் மேனியின் வெளிப் பொலிவு தான் இங்கே விருத்தி செய்யப்படுகிறது. உயிராகிய ஒழுக்கம் ஓங்கவில்லை; ஒடுங்கித் தான் கிடக்கிறது. விபீஷண வடிவில் ஒதுங்கி ஒளிந்து வளரத்தான் முடிகிறது!

வளர் நிலவின் ஒளியிலும், உள்ளே உறைந்திருக்கும் மையிருட்டு நன்கு புலனாகிறது, ஊடுருவிப் பார்க்கக் கூடிய அனுமனுக்கு. அதிகார ஆடம்பரமும் புற வலிமையும் ஜீவசக்திக் குறைவை மறைத்த போதிலும், அனுமனுடைய அறிவுக் கண்களுக்கு இலங்கையின் ஆத்மா உள்ளபடி புலனாகி விடுகிறது. 'சித்திர நகரம் ... சிதைவது திண்ணம்' என்பதை இந்த நகரமே தெரிவித்து விடுகிறது!

தெய்வத்தைப் பழிக்கும் ராட்சஸ ராஜதானி, பொருள் போகம் வேகம் என்ற மும்மூர்த்திகளுக்கும், கள்ளுத் தெய்வம் என்ற நான்காவது மூர்த்திக்கும் அடிமைப்பட்டுக் கிடப்பது, இந்த நட்ட நடுநிசியிலே அனுமனுக்குப் பட்டப் பகல் போல் வெளிச்சமாகி விடுகிறது.

மோகமும் மயக்கமும்

இனி, இலங்கையின் முகவிலாஸத்தைப் புறநகரிலும், நடுநகரிலும், அகநகரில் யட்ச ஸ்திரீகள் வீதியிலும் அரக்கியர் வீதியிலும் கண்டு கொண்ட அனுமன், வித்தியாதர மாதர்கள் வசிக்கும் வீதியை அடைகிறான். இவர்களும் ராவண விரகத்தால் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ராவண சக்ரவர்த்தி எப்போது வருவான், எப்போது வருவான் என்று ஏங்கித் தவிப்பவர்கள்,

வளர்ந்த காதலர்,
மகரிகை நெடுமுடி
அரக்கனை வரக்காணார்,
தளர்ந்த சிந்தைநம்
இடையினும் நடுங்கிட
உயிரொடு தடுமாறி,—

[வளர்ந்த காதலர்—ராவணனை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கும் காதலையுடையவர்களான சில வித்யாதரப் பெண்

கள். மகரிகை நெடுமுடி—மகர மீனின் வடிவம் போலச் சித்திரிக்கப் பெற்றிருக்கும் பெரிய கிரீடம். அரக்கனை—(இங்கே) ராவணனை. வரக் காணார் — வரக் காணுதவர்களாய். இடையினும்—இடையைக் காட்டிலும்]

— பொழுது போக்காகச் சங்கீதம் கேட்க விரும்பினார்கள். ஆனால் அது கீதமாகவா வருகிறது? செவியில் நுழைகிறதாம் பாம்புபோலே.

சொற்ப காலமும் யுகங்கள் போல நீண்டு செல்லுகிறது. இவர்கள்,

சிறுகு காலங்கள்
  ஊழிக ளாம்வகை
  திரிந்துசிந் தனைசிந்த,
முறுகு காதலின்
  வேதனை உழப்பவர்...

[சிறுகு காலங்கள் — சொற்ப காலங்கள்; நிமிஷம், நாழிகை முதலிய சிறு கால அளவுகளும். முறுகு—முதிர்ந்த. உழப்பவர்—வருந்துகிறவர்கள்.]

வித்யாதர மாதர்களின் வீதி கடந்து ராவணனது அரண்மனையை நோக்கிப் போகிறான் அனுமன். அந்த அரண்மனையைச் சமீபித்ததும், தனியாக அமைந்திருக்கும் வேறொரு மாளிகையைக் கவனிக்கிறான்.

அம் மாளிகையின் சிறப்பையும், அதிலே பிரகாசிக்கும் இரத்தின தீபங்களையும் பார்க்கிறான். அந்த நவரத்தின தீபங்கள் மங்கும்படி பிரகாசிக்கும் ஒரு ஸ்திரீ ரத்தினத்தின் தேக காந்தியையும் காண்கிறான். கண்டதும், எவ்வளவு கோபமும் துயரமும் அடைகிறான்!

என்ன மயக்கம்! அனுமனுக்குமா இந்த மயக்கம்? தன் கண்ணுக்கும் உள்ளத்திற்கும் கேள்வி போடுகிறான்,—'கண்ணே! நீ சரியாகத்தான் காண்கிறாயா? கருத்தே! நீ கருதுவது சரி தானா?' என்று.

அந்தத் திவ்ய மாளிகையில் மகா சம்பிரமத்துடன் தூங்கிக் கொண்டிருக்கும் அந்தப் பெண்ணரசைச் சீதா தேவியென்றே சந்தேகிக்கிறான்!

ஆனால் அடுத்த நிமிஷத்திலேயே மயக்கம் தெளிந்து விடுகிறது.

'இராமன்மேல் நோக்கிய
  காதல், கா ரிகையார்க்கு
மீனு யர்த்தவன்
  மருங்குதான் மீளுமோ?
  நினைந்தது மிகை' என்றான்.

[கா ரிகை யார்க்கு — பெண்களுக்கு. மீன் உயர்த்தவன் மருங்குதான் — மன்மதனிடத்திலே தான். மீளுமோ — திரும்பிச் செல்லுமோ. மிகை—குற்றம்.]

ராமனது ரூப சம்பத்திலே அனுமனுக்குத்தான் எவ்வளவு காதல்! போங்கள், கவிஞனுக்குத்தான் கொஞ்சமோ காதல்?

சரி, ராமனைத்தானே பார்த்திருக்கிறான் அனுமன், சீதையை இன்னும் பார்க்க வில்லையே!

இது நிற்க. அனுமனையும் சற்று மயங்கச் செய்தவள் வேறு யாருமில்லை, ராவணனது பட்டமகிஷியான மண்டோதரிதான். அனுமனோ 'இவள் சீதை இல்லை' என்று ஊகித்துக் கொண்டு ராவணன் மாளிகைக்குள் பிரவேசிக்கிறான். பிரவேசித்ததும் தீநிமித்தங்களை (உற்பாதங்களை)க் காண்கிறான்.

இந்த நிமித்தங்கள் லங்கைக்குத் தான், லங்கேசனுக்குத்தான். எனினும் பண்பட்ட நெஞ்சு நெகிழ்ந்து உருகுகிறது, 'ஆஹா, என்ன ஹிருதய சம்பத்து?' என்று நாம் பிரமிக்கும்படி.

நீங்கும்அந் தோ இந்த
  நெடுநகர்த் திரு!

[அந்தோ — ஐயோ. திரு — செல்வச் சிறப்பும், சிற்ப அழகு முதலான பல வகை அழகுகளும்.]

என்று பரிதவிக்கும் பண்பாட்டைப் பாருங்கள்.

இந்த 'நெடுநகர்த் திரு' எல்லாம் முகமூடி தான் · ஸ்ரீமதி இலங்கையின் உண்மையான திருமுக விலாஸம், அகத்தின் அழகைப் பிரதிபலிக்கும் அரக்க நீர்மைதான், ராவணாகாரமான கொடுமை தான்.



பி. ஸ்ரீ

412. அரண்மனையிலே


பிரபுக்களின் வீடுகளிலெல்லாம் தேடிப் பார்த்த பின் அனுமன் ராவணனுடைய அரண்மனைக்கு வந்து பார்த்த வரலாறு வால்மீகியில் எப்படிக் கூறப்படுகிறது என்பதை ஒருவாறு இப்போது கவனிக்கலாம். அப்பால் கம்பனை மீண்டும் தொடர்ந்து செல்வோம்.

அந்தப்புர வாசலில் சில அரக்கிமார் சூலம் முதலான ஆயுதங்களோடு நின்றார்கள். பருத்த சரீரமுள்ள அரக்கர்களும் ஆயுதபாணிகளாய்க் காத்து நின்றனர்.

சிறந்த குதிரைகளும் யானைகளும் அலங்கரிக்கப் பெற்றனவாய் அங்கே காணப்பட்டன. அழகான பல்லக்குகளும் இருந்தன. விசித்திரமான சித்திரசாலைகள், செய் குன்றுகள் முதலியவற்றையும் அனுமன் பார்த்தான்.

அறிஞர்களான சிற்பிகளின் கைத்திறன் வாய்ந்த அந்தச் செல்வ மாளிகையைக் கண்டு அனுமன் ஆச்சரியமடைந்தான். அந்த அரண்மனை இரத்தின காந்திகளாலும், ராவண தேஜஸாலும், சூரியன் கிரணங்களால் பிரகாசிப்பதுபோலப் பிரகாசித்ததாம்.

குடித்து மிஞ்சிய மதுபானங்கள் இரத்தின பாத்திரங்களில் காணப்பட்டன. குடி வெறியால் கூத்தாடும் பெண்களின் சிலம்பொலிகளும், ஒட்டியாணச் சலங்கை ஓசைகளும், மிருதங்கம் முதலான வாத்திய கோஷங்களும் வந்து காதில் விழுந்தன.




நெருங்கியிராமல் விசாலமான இடைவெளிகளுடன் அமைந்த உன்னத உபரிகைகளையும் மனோஹரமான நிலா முற்றங்களையும் பார்த்தான் அனுமன். சங்கு, வில் முதலான ஆயுதங்கள் வைத்திருந்த இடங்களையும் பார்த்தான்.

தேவர்களும் அசுரர்களும் ராவண பயத்தால் அந்த அரண்மனையைத் தேவாலயம் போல நோக்கிக் கும்பிட்டார்கள். குபேரனிடமிருந்து ராவணன் இதைத் தன் வலிமையே உரிமையாகக் கவர்ந்து கொண்டானும்.

புஷ்பக விமானம்

இப்படி யெல்லாம் அரண்மனையை வருணித்துக் கொண்டே வரும் வால்மீகி, அங்கே அனுமன் கண்ட புஷ்பக விமானத்தை அபாரமாக, ஸர்க்கம் ஸர்க்கமாய் வருணிக்கிறார்.

வேகமாய் ஆகாசத்தில் கிளம்பும் மேகம் போல் இருக்கிறதென்றும், சொர்க்கமே சகல வைபவங்களுடன் பூலோகத்தில் இறங்கி வந்து விட்டதோ என்று கருதும்படி இருக்கிறதென்றும் வருணிக்கிறார். பூக்கள் நிரம்பிய மலைச் சிகரம் போலத் தோன்றியதென்கிறார். (புஷ்பகம் என்ற பெயரின் காரணம் இதுவே என்பர்.) கணக்கற்ற இரத்தினங்களால் ஜொலித்ததாம். விசித்திரமான சித்திரங்களால் சோபித்ததாம். அன்னம் மயில் முதலிய பறவைகள், பவள மூக்குகளுடனும் வெள்ளிக் கால்களுடனும் அமைக்கப்பட்டு, வைடூரியம் முதலான இரத்தினங்களால் இழைக்கப் பெற்று விமானத்தை அழகு செய்தனவாம்...இந்த ரீதியிலே அந்த விமானத்தைத் தாமே நேரில் கண்டு பிரமித்தது போல் வருணித்திருக்கிறார் ஆதிகவி.



மகா லட்சுமியின் விக்கிரகம் கூட இவ்விமானத்தில் வெகு சாதுரியமாய் அமைக்கப் பெற்றிருந்ததாம். இந்த மங்களகரமான விமானத்தை அனுமன் அடிக்கடி சுற்றிப் பார்த்து அடங்காத ஆச்சரியமடைந்தானும், சீதாதேவியைக் காணவில்லையே என்று மிகுந்த துக்கம் அடைந்திருந்த போதிலும்.

'அதன் வர்ணனையின் அழகை மூலத்திலே பார்க்கலாமே யல்லாது மொழி பெயர்ப்பில் எடுத்துக் கூறுவது சாத்தியமன்று' என்பர் 'சுந்தரகாண்ட விமர்சன' ஆசிரியர் திரு. தி. சுந்தராசாரியார். உண்மைதான். இந்த வருணனை நம்மை எவ்வளவோ ஆச்சரியப்படுத்துமாறு அமைந்திருந்தாலும், 'பூமியில் படாமல் ஆகாச மார்க்கத்தில் தங்கியிருக்கும்' இந்தத் தேவ விமானம் போல் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருப்பது போலத்தான் தோன்றுகிறது. கதையோடு இழைக்கப் பெற்றதாய்த் தோன்றவில்லை.

பள்ளியறை

விமானத்தில் இருந்தபடியே அனுமன் ராவணனுடைய பள்ளியறையைப் பார்க்கிறானும். தேவ, அசுர, ராட்சஸ, கந்தர்வ மகளிர் துயின்று கொண்டிருந்தனர். ராவணனுடைய மனைவியர்; அவனை உண்மையாகக் காதலிப்பவர்.

இந்த ஸ்திரீகளுக்கிடையே ராவணனை, நட்சத்திரங்களுக்கிடையே பூர்ண சந்திரனைக் காண்பது போலக் கண்டான் அனுமன். இந்த ஸ்திரீ — நட்சத்திரங்களும் விசேஷமாய் வருணிக்கப்படுகிறார்கள்.

ஸ்படிகத்தால் செய்யப்பட்ட இரத்தினங்கள் இழைத்த கட்டிலிலே ஒருபுறம் சிறந்த மாலைகளால்



அலங்கரிக்கப் பெற்ற ஒரு பூசக்ரக் குடை காணப்பட்டது. விரிப்புகளும் மெத்தைகளும் விரிக்கப்பட்டிருந்தன. நானாவர்ணமுள்ள பூக்கள் வாரி இறைக்கப் பட்டிருந்தன. பலவித வாசனைத் திரவியங்களின் பரிமளமும் நிறைந்திருந்தது.

இந்த மஞ்சத்திலே நீருண்ட மேகம் போல் ஓர் உருவம், பருத்து நீண்டு உருண்ட கைகளுடனும், சிவந்த கண்களுடனும், ஒளி சிறந்த குண்டலங்களுடனும், பொன்னுடை புனைந்து, சிவப்புச் சந்தனம் திகழும் மார்புடன், மகா சர்ப்பம் போல் பெரு மூச்சு விட்டுக் கொண்டு அயர்ந்து தூங்கியது. 'மந்தர பர்வதம் தான் நித்திரை செய்கிறதோ!' என்று நினைத்தான் அனுமன். அவன் தான் பிரதாப லங்கேச்வரன்.

ராவணனை அணுகிப் பார்த்ததும் அனுமன் தன்னை அறியாமலே திடுக்கிட்டுச் சற்றுப் பின் வாங்கினான். பிறகு படிக்கட்டுகளின் வழியாய் வேறொரு மேடையிலேறி அரக்கர்கோனை உற்று நோக்கினான். ராவணனுடைய இரு புயங்களும் அனுமன் கவனத்திற்கு முதல் முதல் இலக்காயின.

அந்தப் புயங்களில் இந்திரனுடைய வஜ்ராயுதம் பாய முயன்று கூர் மழுங்கிப் போயிற்றாம். ஐராவத யானை குத்த முயன்று கொம்பொடித்துக் கொண்டதாம். விஷ்ணு சக்ரமும் கொஞ்சம் காயப்படுத்திப் பிறகு தானே வலி யிழந்து போயிருக்க வேண்டும். யட்சர் கந்தர்வர் தேவர் முதலானவர்களை அழச் செய்த கைகள் அவை!

அந்த அறையிலே ராவணனுடைய காலடியில் உறங்கிக்கொண்டிருக்கும் மனைவியரையும் அனுமன் கண்ணுற்றான். இந்த ஸ்திரீகளின் வருணனைகளும் வி[illegible]ரமா யிருக்கின்றன.

பட்டமகிஷி (ஒரு சிறந்த காட்சியமைப்பு)

சற்றுத் தூரத்தில் ஒரு தனி யிடத்திலே வேறொரு பெண்மணி துயிலமர்ந்திருந்தாள். அழகே உருவெடுத்தது தன்னைத் திவ்யமாக அலங்கரித்துக்கொண்டு, உருக்கி ஓடவிட்ட தங்கம் போல் ஜொலிக்கும் தேக காந்தியுடன், உறங்கிக் கொண்டிருந்தது போலக் காணப்பட்டாள் அவள்.

அந்த ஒப்பற்ற அழகு அந்தப் பள்ளியறைக்கே சிறந்த ஆபரணமாய்த் திகழ்

தது. அவளைச் சீதை என்றே மயங்கி ஞன் அனுமன். அவள் தான் பட்ட மகிஷியான மந்தோதரி.

'சீதையைக் கண்டு பிடித்து விட் டோம்' என்ற பெரு மகிழ்ச்சி இந்த அனுமனைத்தான் என்ன பாடு படுத்தி வைத்தது! குதூகலம் தாங்காமல் தோள் கொட்டினுன்; குதித்து விளையாடினுன்; ஸ்தம்பங்களில் ஏறிக் குதித்தான். வாலை முத்தமிட்டுக் கொண்டான்!

இப்படி வானரங்களுக்கு இயற்கை யான சேஷ்டைகளை யெல்லாம் செய் தான் அனுமன் என்று வருணிக்கிறார் வால்மீகி.

எவ்வளவோ துக்கத்தினிடையே, அடுக்கடுக்காய் வந்து கொண்டிருக்கும் முக்கிய நிகழ்ச்சிகளுக்கிடையே, சிரமபரி காரம் போல் அமைந்திருக்கிறது இந்தக் காட்சி. பிறகு கொஞ்சம் ஆலோசித்து இவள் சீதை யில்லை யென்று தெளிந்து, மறுபடியும் அனுமன் கவலை கொண்டு தேடப் போகிறுனல்லவா?

இந்தச் சந்தர்ப்பத்தில், ரஸிகர் தி. சுந்தராசாரியார் விமர்சனம் செய்யும் போது, 'சீதையைக் காண வேண்டு மென்கிற எண்ணத்தை இதுவரையில் தாங்கி அதன் பாரம் பொறுக்க மாட்டா மல் கீழே போட்டார் போலும்' என்று ரஸமாய், அதி உசிதமாய்க் கூறியுள்ளார்.

அப்பால் மயக்கம் தெளிந்து தன் புத் தியை ஸ்திரப்படுத்திக் கொண்டு மறுபடி யும் தேட ஆரம்பிக்கிறுன் அனுமன். பானசாலையில் தேடும்போது அங்கே பல வகை மாம்ஸங்களும் விசேஷமாய் வரு ணிக்கப்படுகின்றன.

கடைசியாக, 'சீதை இலங்கையில் இல்லை' என்று எண்ணி 'உயிர் துறப் பதே நலம்' என்று முடிவு கட்டுகிறுன் அனுமன். இது வால்மீகியின் கதைப் போக்கு.

கம்பன் காவியத்திலே

மந்தோதரியைப் பார்த்த பின்பு தான் ராவணனைப் பார்க்கிறுன் அனு மன் என்பது கம்ப சித்திரம்.

'நீங்கும் அந்தோ இந்த நெடுநகர்த் திரு!' என்று பரிதவிக்கும் அனுமன் கண்ட நிமித்தங்கள் பின்வருமாறு வரு ணிக்கப் படுகின்றன:

நிலம்து டித்தன;
நெடுவரை பொடித்தன;
நிருதர்தம் குலமாதர்
பொலம் துடிக்(கு)அமை
மருங்குல்போல் கண்களும்
உருவமும் பொற்றேளும்
வலம்து டித்தன;
மாதிரம் துடித்தன;
தடித்(து)இன்றி மதிவானம்
கலந்தி டித்தன;
வெடித்தன பூரண
மங்கல கலசங்கள்.

[நிலம் துடித்தன—பூமி யதிர்ச்சி ஏற் பட்டது. நெடு வரை—பெரிய மலைகள். பொடித்தன—பொடியாய் உதிர்ந்தன. நிருதர் தம் குலமாதர்—ராட்சஸ ஜாதி மாதர்களின். பொலம் துடிக்கு அமை மருங்குல் — அழகியதும், உடுக்கைக்கு ஒப்பாக அமைந்ததுமான இடை. மருங் குல் போல்—இடை துவண்டு நடுங்குவது போல். பொற்றேளும்—அழகிய தோள் களும். வலம்—வலப் புறம். மாதிரம் துடித்தன—திக்குகள் அதிர்ந்தன. தடி த்து இன்றி—மின்னல் இல்லாமலே. மதிவானம்—சந்திரன் விளங்குகிற ஆகா யத்திலே.]

பெரிய பெரிய மலைகள் பொடிப் பொடியாய் உதிர்ந்து போகின்றனவோ! —என்பது போன்ற உணர்ச்சிகூட ஏற் படுகிறது. மலை மலையாகக் காணும் ராட்சஸத் தலைவர்கள் விரைவில் வீழ்ச்சி யடையப் போகிறுர்களல்லவா?

கடைசி அடியாகிய

கலந்தி டித்தன,
வெடித்தன பூரண
மங்கல கலசங்கள்

என்பதைப் படித்துப் பாருங்கள்.

தீயணைக்கும் யந்திரம் எச்சரிக்கை — மணிகளை அடித்து முழக்கிக் கொண்டு உருண்டோடுவதுபோல் இருக்கிறதல் லவா இந்த ஓசைச் சித்திரம்?



413. வெண்மலர்ப் பள்ளியிலே

ராவணனை முதல்முதல் நாம் நேரில் பார்ப்பது ஆரணிய காண்டத்திலேதான். அரக்கர்கோன் அரசு வீற்றிருந்த சிறப்பு இருபத்திரண்டு கவிகளில் கூறப்படுகிறது. அங்கேயே ராவண காவியம் கம்பீரமாய், ராவணாகாரமாய்த் தொடங்கி விடுகிறது.

அந்த அழகும் இந்த அழகும்

அந்த வீர சிங்காதனத்திலே வீற்றிருந்த காம்பீர்யத்தைச் சுந்தர காண்டத்திலே சயனித்திருக்கக் காண்கிறோம். சூர்ப்பணகை அங்கபங்கமுற்ற நிலையில் போய்ப் பார்க்கிறாளே அந்த ராவண தர்பார் அது. அனுமன் வந்து பார்க்கும்போது அரக்கர்கோனின் சயனக்கோலம் இது.

அரண்மனையைச் சுற்றியுள்ள வெளியிடத்தில் 'ஒரு பெருங்கடலே பரவியிருக்கிறதோ ஆயுத மயமாய்!' என்று சொல்லும்படி மிகப் பல காவலாளர்கள் திரண்டு வேலேந்திய கையராய் அங்கு மிங்கும் உலாவிக் கொண்டே காவல் செய்கின்றனர். அந்தக் காவலைக் கடந்து அரண்மனைக்கு உள்ளே வந்து விட்டான் அனுமன்.

வயிரக்கல் மாளிகையாகிய அந்தப்புரத்திலே வெண்மலர்ப் பள்ளியில், பாற்கடல் மீது ஒரு கருங்கடல் கிடந்தாற்போல் படுத்திருக்கும் ராவணனைப் பார்க்கிறான்.

திருப்பாற்கடலில் ஆதிசேஷ சயனத்தில் திருமால் படுத்திருக்கும் அந்தச் சயனத் திருக் கோலத்தையே நினைப்பூட்டுகிறதாம் - இந்த ராவணேச்வரனுடைய சயனக் காட்சி:

நாற்பெ ருங்கடல்
  நுணங்கிய கேள்வியன்
  நோக்கினன், இயல்நோன்தாள்
வேற்பெ ருங்கடல்
  புடைபரந்(து) ஈண்டிய
  வெள்ளிடை வியன்கோயில்,
பாற்பெ ருங்கடல்
  பன்மணிப் பஃறலைப்
  பாம்பணை அதன்மீது
மால்–க ருங்கடல்
  வதிந்ததே அனையதோர்
  வனப்பினன் துயில்வானை...

[நாற்பெருங்கடல் – நூல்களாகிய பெரிய கடல் போன்றவனும், நுணங்கிய – நுட்பமான. கேள்வியன் – கேள்விகளை உடையவனுமாகிய அனுமன். இயல் – (ஓரோ இடத்தில் நில்லா

மல்) உலாவுகிற. தோன்தாள் — வலிய கால்களும். வேல் பெருங்கடல் — வேலாயுதங்களும் உள்ள பெரிய காவலாளர்களாகிய சமுத்திரம். புடை பரந்து—எப்புறத்தும் பரவி. ஈண்டிய — திரண்டிருக்கிற. வெள் இடை — வெளியிட முள்ள. வியன் கோயில் — விசாலமான அரண்மனையிலே. பால் பெருங் கடல் — பெரிய பாற்கடலில். பன்மணிப் பஃறலைப் பாம்பணை அதன் மீது — பல மணிகளையுள்ள பல தலைகளோடு கூடிய சர்ப்ப சயனத்தின்மேல். மால் கருங் கடல் — திருமாலாகிய கருங்கடல். வதிந்ததே அனையது — தங்கி யிருந்தாற்போன்றதான. ஓர் வனப்பினன் — ஓர் அழகுத் தோற்றம் உடையவனும். துயில்வானை — தூங்கிக் கொண்டிருப்பவனுகிய ராவணனை.]

ஆரணிய காண்டத்திலே கொலுவிருந்த அந்த வனப்பினைப்போல் அவ்வளவு ரஸமாகவும் கம்பீரமாகவும் வருணிக்கப்படுகிறது இந்தத் துயிலமர்ந்த வனப்பும்.

குகையில் உறங்கும் நரசிங்கம்

பள்ளிகொண்ட பெருமாளுக்கே இந்த ராவணனை ஒப்பிடத் துணிந்த கவிஞன், அடுத்த பாட்டிலே அந்தத் திருமாலின் கம்பீர பயங்கர அவதாரமாகிய நரசிங்கமூர்த்திக்கும் ராவணனை ஒப்பிடத் துணிகிறுன்.

ஒரு சிங்கத்தின் காம்பீர்ய அழகும் பயங்கர மாட்சியும், அது துயிலும் அந்த மலைக்குகையின் சூழ்நிலை யழகுகளுடனும் இயற்கை - மாட்சியுடனும் அப்படியே படிந்து கிடப்பது போலக் காண்கிறது இந்தச் செய்யுள் - மாட்சி :

குழவி ஞாயிறு
  குன்(று)இவர்ந்(து) அனையன
  குருமணி நெடுமோலி,
இழைக ளோடுநின்(று)
  இளவெயில் எறித்திட
  இரவெனும் பொருள்விய
முழைகொள் மேருவின்
  பொருட்டிடைக் கனகனை
    முருக்கிய முரண் — சீயம்,
தழைகொள் தோளொடு
  தலைபல பரப்பிமுன்
    துயில்வதோர் தகையானை.

[குழவி ஞாயிறு—பால சூரியன். குன்று இவர்ந்து அனையன — உதய கிரியில் எதிரிருப்பது போன்றனவான. குருமணி நெடு மோலி — முழு மாணிக்கங்கள் பதித்த நெடுங் கிரீடங்கள். இழைகளோடு — மற்றைய ஆபரணங்களுடன். எறித்திட — வீச. இரவு எனும் பொருள் விய — இரவு என்கிற பொருள் அழிந்தொழிய. முழை—குகை. மேருவின் பொருட்டிடை —மேரு மலையினிடையே. கனகனை — இரணியனை. முருக்கிய — கொன்ற. முரண் சீயம் — வலிமையுள்ள நரசிங்க மூர்த்தி. தழை கொள்—தழைத்திருக்கிற. துயில்வதோர் தகையானை — தூங்குவது போன்ற ஒரு தகுதியுள்ள ராவணனை.]

சுழிபடு பசுங் காற்றிலே

இப்படித் துயிலமர்ந்திருக்கும் ராவணன் மீது இளங்காற்று வீசுமாறு தேவரம்பையர் சாமரை வீசுகிறுர்கள். அந்த அப்ஸரஸ்களின் தெய்விகச் சாயலும், அவர்கள் சாமரைகளைச் சுழற்றி வீசும் அழகும், பொற்காம்புடன் கூடிய சாமரைகளின் தூய அழகுடனும், அந்தச் 'சுழிபடு பசுங்காற்றின்' இனிமையுடனும் எப்படித்தான் புலனுகின்றனவோ இந்தச் செய்யுளடிகளிலே :

ஆய பொற்றலத்(து)
  ஆய்வளை அரம்பையர்
    ஆயிரர் அணிநின்று,
தூய பொற்கவ—
  ரித்திரள் இயக்கிடச்
    சுழிபடு பசுங்காற்றின்...

[ஆய பொற்றலத்து — பொன்மயமான சொர்க்க லோகத்தைச் சேர்ந்த. ஆய் வளை—ஆராய்ந்தெடுத்த வளை. அணி நின்று—இருபுறமும் வரிசையாக நின்று. தூய பொற்கவரித் திரள் — வெண்ணிறமாகவும் பொற்காம்பு இட்டவையுமான சாமரைக் கற்றைகளை. இயக்கிட — வீசுவதால். பசுங் காற்றின் — இளங் காற்றினுல்.]

அக்காலமும் இக்காலமும்

இந்த ராவணேச்வரனின் தோள் வலிமையைத்தான் என்னென்பது? சிவனுடைய சூலமும் பாயத் துணிந்த தில்லையாம், கயிலையைக் குலுக்கிய காலத்திலே.

அந்தத் தோள்களை ஊடுருவிப் பாய்கின்றனவாம் மன்மதனின் மலரம்புகள் இப்போது. அது ஒரு காலம், இது ஒரு காலம்.

இந்தக் காலத்தோடு அந்தக் காலத்தை முரண்பட வைத்துக் காட்டுகின்ற அழகைத்தான் பாருங்கள்:

குழந்தை வெண்மதிக்
குடுமியன் நெடுவரை
குலுக்கிய குலத்தோளைக்
கழிந்து புக்(கு)இடை
கரந்தன அனங்கன்வெங்
கடுங்கணை பலபாய......

[குழந்தை வெண்மதிக் குடுமியன் — இளஞ் சந்திரனைத் திருமுடியில் சூடிய சிவபெருமானின். நெடுவரை — பெரிய கயிலயங்கிரி. குலத்தோளை — சிறந்த தோள்களை. கழிந்து புக்கு — ஊடுருவிச் சென்று. இடை கரந்தன — இடையே மறைந்தனவாய். அனங்கன் — அங்கமில்லாதவனாகிய மன்மதனது. வெங்கடுங்கணை — மிகக் கொடிய அம்புகள்.]

கனலில் உறங்குவது

படுக்கையில் தான் கிடக்கிறான் ராவணன்; கண்களும் மூடித்தானிருக்கின்றன. ஆனால் உறங்கிக் கொண்டு தானிருக்கிறானா? வெண்மலர்ப் பள்ளியிலா படுத்திருக்கிறான்? வெங்காம வெங்கனலில் அல்லவா?

சாந்த ளாவிய
கலவைமேல் தவழ்வுறு
தண்டமிழ்ப் பசுந்தென்றல்,
ஏய்ந்த கர்மவெங்—
கனலினுக்(கு) உமிழ்அதள்—
துருத்தியின் உயிர்ப்(பு)ஏற —

[சாந்து அளாவிய கலவைமேல்— (உடம்பில் பூசிய) கலவைச் சந்தனத்தின் மேல். தவழ்வுறு — தவழ்வது போல் வீசுகிற. தண் தமிழ்ப் பசுந்தென்றல் — குளிர்ந்த தமிழ் போல் இனிய இளந் தென்றல். ஏய்ந்த — (ராவணன்) இப்போது கொண்டுள்ள. உமிழ் — வீசுகிற. அதள் துருத்தியின் — தோல் துருத்தியின். உயிர்ப்பு ஏற — காற்றாக மேலும் செல்ல.]

என்றல்லவா காட்டுகிறான் கவிஞன்?



இந்த ராவண காவிய வருணனைப் பகுதி உச்ச நிலைக்கு வந்து விடுகிறது,

இரண்டு பாடல்களிலே. அச்சந் தரும் பிடுக்கும் வலிமையும், வசீகரிக்கும் அழ குடனும் மாட்சியுடனும் போட்டி போடு கின்றன.

இலங்கையின் சூட்சும அரண்

இரத்தின ஹாரம் புரண்டு விளங்கும் அந்த மார்பிலே ஈரம்தானில்லை, — எத் தகைய வீரம் குடி கொண்டிருக்கிறது பாருங்கள்.

தழுவா நின்ற
கருங்கடல் மீ(து) உதய
இரியில் சுடர்தயங்க
எழுவான் என்ன,
மின்னிமைக்கும் ஆரம்புரளும்
இயல்பிற் ருய்,
முழுவா னவராய்
உலகமொரு மூன்றும்
காக்கும் முதல்தேவர்
மழுவாள் நேமி
குலிசத்தின் வாய்மை
துடைத்த மார்பானே.

[தழுவாநின்ற - அலைகள் ஒன்றோ டொன்று தழுவிப் பரவியுள்ள. எழு வான் என்ன - எழுகின்ற சூரியன் போல. மின் இமைக்கும் — மின்னல் இமைப்பது போல் ஒளி விளங்குகிற. ஆரம் — (இங்கே) இரத்தின ஹாரம். இயல்பிற்ருய் — தன்மையுடையதாய். முழு வானவராய் — தேவர்களின் தனிப் பெருந் தலைவர்களாய். முதல் தேவர் — சிறந்த தெய்வங்களான சிவபெருமான் விஷ்ணு தேவேந்திரன் என்பவர்களின். வாள் நேமி — ஒளியுள்ள சக்கரம். குலி சம் — வச்சிராயுதம். வாய்மை—(இங்கே) தவருத வலிமை]

என்ற பாட்டின் போக்கைப் பாருங்கள்.

அந்த வீர மார்பிலே ராவணேச்வர னின் திக்விஜயம், அந்த இரத்தின ஹாரம் புரளுவது போல் அப்படியே பிரகாசிக்கிறது !

அந்தக் கால்களிலுள்ள தழும்புகளோ, எத்தனை எதிரிகள் அஞ்சி நடுங்கி அடி பணிந்தார்கள் என்ற அந்த விஜய சரித் திரத்தைப் பேசுகின்றன.

சப்தஜாலங்களே ராவணனுக்குக் கம் பீரமாய்க் கட்டியங் கூறுகின்றன :

தோடுழுதண் தார்வண்டும்,
திசையானை மதம்துதைந்த
வண்டும் துற்ற,
மாடுழுத நறுங்கலவை
வயக்களிற்றின் சிந்துரத்தை
மாறு கொள்ளக்
கோடுழுத மார்பானைக்,
கொலையுழுத வடிவேலின்
கொற்றம் அஞ்சித்
தாள்தொழுத பகைவேந்தர்
முடியுழுத தழும்பிருந்த
சரணத் தானை.

[தோடு - பூ இதழ்களில். உழு - உழுகின்ற தண் தார் வண்டும் — (மார் பில் அணிந்திருக்கும்) குளிர்ந்த மாலையி லுள்ள வண்டுகளும். மதம் துதைந்த — மத நீரிலே நெருங்கி மொய்த்துள்ள. துற்ற — உண்ணுமாறு. மாடு உழுத நறுங்கலவை — தன்னிடத்திலே (மார் பிலே) பூசிய வாசனை யுள்ள கலவைச் சந்தனம். வயக் களிற்றின் — வலிமை யுள்ள திக்கஜங்களின். சிந்தூரத்தை — (நெற்றியில் அணிந்த) சிந்தூர தில கத்தை. மாறு கொள்ள — மாற்றிக் கொள்ளும்படி. கோடு உழுத — அந்த யானைகளின் தந்தங்கள் பதிந்துள்ள. வடி — கூரிய. கொற்றம் — வெற்றிக்கு. தாள் — கால்களில். சரணத்தானை - கால்களையுடைய ராவணனை.]

இந்த வீர மார்புதானே அரக்கர் பேரூரின் சூட்சுமப் பேராண் ? இந்த 'முடியுழுத' அடிகளல்லவா, அகில உலக அடிமைத்தனத்தின் நினைவுக் குறி ?

* * *

வீர கண்டாமணி ஒலிப்பது போல வும், வீர முரசு முழங்குவது போலவும் ராவண பராக்கிரமத்தை ராவண காவிய மாக்கிக் காட்டி, இத்தகைய ராவணேச் வரனை அனுமன் நோக்கினன், நன்ருக நோக்கினன் என்று கவிஞன் முடிக் கிருன் இந்தப் பகுதியில்.



411. சீதை இல்லையே !

ராவணனுடைய ஆஸ்தான கவியே ராவண ஸ்தோத்திரம் பாடியது போல் அமைந்து விட்டன, அனுமன் கண்ட ராவணனைக் குறித்த கடைசி இரண்டு பாடல்களும். இனி, அந்த ராவண மாட்சியைக் கண்ட அனும கோபம் வருணிக்கப்படுகிறது.

குறுகி நின்ற எரிமலை

ராவணனுடைய காமத்திற்கும் தோள் வலிமைக்கும் புத்தி சாமர்த்தியங்களுக்கும் எதிர்த் தட்டிலே அனும பராக்கிரமத்தையும் கோபத்தையும் புலனடக்கத்தையும் பேரறிவுப் பெருந்திறனையும் வைத்துப் பார்ப்பது போல அமைந்திருக்கின்றன ராவண வருணனையை அடுத்தவரும் ஏழு பாடல்கள்.

ராவணனுடைய பெரிய ராட்சஸ உடம்பிற்கு எதிர்த்தட்டிலே நிற்கும் அனும உருவத்தைத்தான் பாருங்கள் :

கொண்டதோர் உருவம்
மாயோன் குறளினும்
குறுக நின்றான்.

[மாயோன் — திருமால். குறளினும் — வாமன வடிவத்தைக் காட்டிலும்.]

இந்த வானரக் குறளின் கோபமோ எரிமலை போலப் பொங்கி வெடித்து ராவண மாட்சியை அப்படியே எரித்து விடப் போவது போலக் காண்கிறது :

திண் தலை பத்தும்
தோள்கள் இருபதும்
தெரிய நோக்கிக்
கண்டனன் ; கண்ட
லோடும், கருத்தின்முன்
காலச் செந்தீ
விண்டன கண்கள்;
கீண்டு வெடித்தன
கீழும் மேலும் !

[திண் தலை—வலிய தலைகள். கருத்தின் முன் — அனுமனது கருத்திற்கும் முன்னமே. காலச் செந்தீ விண்டன கண்கள் — செந்நிறமான காலாக்கினியைக் கக்கின கண்கள். கீண்டு — கீறி.]

நெருப்பைக் கக்கும் இந்தக் கோபம் நெருப்பைக் கக்கும் வார்த்தைகளில் வெளிப்படுகிறது:

தோளாற்றல் என்னாகும் ?
மேல் நிற்கும் சொல்என்னாம் ?
வாளாற்று கண்ணாளை
வஞ்சித்தான் மணிமுடி, என்



தாளாற்றலால் இடித்துத்
தலைபத்தும் தகர்த்(து)என்தன்
ஆளாற்றல் காட்டேனல்,
அடியேனய் முடியேனே!

[வாள் ஆற்ற கண்ணாள்—வாளாயுதம் போன்ற கண்களையுடைய சீதை. தாள் ஆற்றலால்— கால்களின் வலிமையால். ஆள் ஆற்றல் — ஆண்மைத்திறம். காட்டேனல் — காட்டாமற்போனல்.]

இப்படியே உதைத்துருட்டிப் பயலைத் தொலைத்து விடலாமா என்ற எரிமலைக் கோபம் மேன் மேலும் வெடித்துப் பொங்கி வெள்ளமிடுகிறது :

நடித்துவாழ் தகைமையதோ
அடிமைதான்? நன்னுதலைப்
பிடித்தவாள் அரக்கனர்
யான்கண்டும் பிழைப்பரோ?
ஒடித்துவான் தோள்
அனைத்தும்
தலைபத்தும் உதைத்(து)
உருட்டி
முடித்(து), இவ்வூர்
முடித்தால், மேல்
முடிவதெலாம் முடிந்
தொழிக!

[தகைமை—தன்மை. அடிமை—(நான் ராமதாஸன் என்ற) அடிமைத் திறம். நன்னுதல்—அழகிய நெற்றியை யுடைய சீதை. வான் தோள்—பெரிய தோள்கள். முடிவதெலாம் முடிந்தொழிக—நடப்பதெல்லாம் நடந்து தீர்க.]

எரிமலை அடங்குகிறது!

பல்லைக் கடித்துக் கைகளைப் பிசைந்து கொண்டு அனுமன் தனக்குள் தானே சொல்லிக் கொள்ளும் சொற்கள் அப்படியே நம் காதில் வந்து விழுகின்றன. எனினும் அனும கோபம் ராட்சஸ கோபமன்று; அறிவைப் புகைக்கும் கோபமன்று. தர்மாவேசத்திலே பிறந்து இயங்குவதல்லவா?

உடனே கோபத்தை அடக்கிக் கொள்கிறன். 'அது எஜமானன் பணியன்று' என்று சிந்திக்கிறன். 'ஒன்றை முயன்ற வேறொன்று செய்வது அறிவுடைமைக்கு அழகன்று' என்று தீர்மானிக்கிறன் :

என்(று)ஊக்கி எயிறுகடித்து
இருகரமும் பிசைந்தெழுந்து,
நின்(று)ஊக்கி உணர்ந்துரைப்
பான்.
'நேமியோன் பணியன்ருல்;

ஒன்(று)ஊக்கி ஒன்(று)
இழைத்தல்
உணர்(வு)உடைமைக்(கு)
உரித்தன்று;
பின்தூக்கின், இதுசாலப்
பிழையாகும்' எனப்பெயர்ந்
தான்.

[என்று ஊக்கி — என்று எண்ணி ஊக்கம் கொண்டு. எயிறு—பற்கள். இரு கரனும்— இரண்டு கைகளும். நின்று — சற்று அப்படியே நின்று. ஊக்கி உணர்ந்து—ஊக்கமாய் ஆலோசித்துப் பார்த்து. உரைப்பான்— தனக்குள் தானே சொல்லிக் கொள்பவனாய். நேமியோன் பணி அன்று — ராமபிரானது கட்டளை அன்று. ஒன்று ஊக்கி — ஒன்றைச் செய்ய முயன்று. ஒன்று இழைத்தல் — வேறொன்றைச் செய்வது. உணர்வு உடைமைக்கு — அறிவுடைமைக்கு. உரித்தன்று — உரியதன்று. பின் தூக்கின் — பின்பு ஆலோசித்துப் பார்க்குமிடத்து. இது சாலப் பிழையாகும் — நான் ராவணனைக் கொல்லப் பார்க்கும் இச்செயல் மிகவும் பிழையாகும். எனப் பெயர்ந்தான் — என்று அந்தச் செயலி லிருந்து பின் வாங்கினான்.]

ஆலோசியாமல் எந்தக் காரியத்தையும் நல்லறிவாளர் செய்ய மாட்டார்கள். எவ்வளவு ஆற்றல் அமைந்திருந்தாலும் சீலம் பார்க்கிறவர்கள் — அதாவது ஒழுக்க நெறியிலே நிற்பவர்கள் — முன் பின் ஆலோசித்துப் பாராமல் எதுவும் செய்ய மாட்டார்கள். இப்படியெல்லாம் ஆலோசிக்கும் பேரறிவாளன் காலத்தை எதிர்பார்த்துக் கரை கடவாமல் இருக்கும் சக்திக் கடல்போல் அடங்கி நிற்கிறான்:



ஆலம்பார்த்(து) உண்டவன்போல்
ஆற்றல் அமைந்துளரெனினும்,
சீலம்பார்க் குரியோர்கள்
எண்ணாது செய்பவோ?
மூலம்பார்க் குறின்,உலகை
முற்றுவிக்கும் முறைதெரினும்,
காலம்பார்த்(து) இறைவேலை
கடவாத கடலொத்தான்.

[ஆலம் பார்த்து உண்டவன் போல் — கொடிய விஷமென்று தெரிந்தே உட்கொண்டவனாகிய சிவ பெருமான் போல். உளர் எனினும் — உள்ளவராயினும். சீலம் பார்க்க உரியோர்கள் — ஒழுக்க முறையைப் பாதுகாக்கும் உரிமையுள்ள பெரியோர். செய்பவோ — செய்வார்களோ. மூலம் பார்க்குறின் — தன் தலைமையைப் பார்க்குமிடத்து. முற்றுவிக்கும் —

முடித்து அழியச் செய்யும். இறைவேலை நடவாது — சிறிதும் கரை கடவாமல் அடங்கி நிற்கிற.]

அனுமனுடைய இந்தத் தனிமையுரை எத்தகைய அதிசயமான அடக்கத்துடனும், தன்னைக் குறைத்து நோக்கும் ஒரு வகை ஹாஸ்யத்துடனும் முற்றப் பெறுகிறது பாருங்கள் :

'இற்றைப்போர்ப் பெருஞ்சீற்றம்
என்னோடு முடிந்திடுக ;
கற்றைப்பூங் குழலாளைச்
சிறைவைத்த கண்டகனை
முற்றப்போர் முடித்தநொரு
குரங்கென்றால், முனைவீரன்
கொற்றப்போர்ச் சிலைத்தொழிற்குக்
குறைவுண்டாம் !' எனக்
குறைந்தான்.

[இற்றைப் போர்ப் பெருஞ்சீற்றம் — 'இப்போது இந்த ராவணனோடு போர் செய்யவேண்டுமென்று எழுந்த என் பெருங்கோபம். என்னோடு முடிந்திடுக — என் உள்ளத்திலேயே பிறருக்குத் தெரியாமல் அடங்கிப் போகட்டும். கற்றைப் பூங்குழலாளை — சீதாபிராட்டியை. கண்டகனை — முள்ளைப்போல் சமுதாயத்திற்குத் துன்பம் செய்பவனாகிய ராவணனை. முற்ற — முடிந்து போகும் படி ; அழிந்து போகும்படி. முனைவீரன் — துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனத்திலே முனைந்து நிற்கிற ராமபிரானது. கொற்றப் போர்ச் சிலைத்தொழிற்கு — வெற்றிதரும் போரைச் செய்யவல்ல வில்லின் தொழில் தேர்ச்சிக்கு. குறைந்தான் — அடங்கி நின்றான்.]

'விஜயகோதண்ட பாணியாகிய ஸ்ரீ ராமனது வெற்றியாக முடியவேண்டிய ராமாயணத்தை ஒரு குரங்கு முடித்து விட்டதென்றால் குறைவல்லவா ?' என்ற அனுமன் உரையில் எத்தகைய எஜமான பக்தியும், பேரறிவும் போராற்றலும் வாய்ந்த பெரியோனுக்கே உரிய பெரும் பணிவும், எவ்வளவு நன்றாகத் தெளிவாகப் புலனாகின்றன பாருங்கள் ! கண்ணாடியில் அனுமனுடைய நெஞ்சை வைத்துக் காட்டுவது போலக் காட்டுகிறது இப்பாட்டு.

'ராவணன் காமத்தால் தவிக்கின்ற இந்த நிலைமையே பிராட்டி நல்ல நிலையில் இருக்கின்றாள் என்ற செய்தியைத் தெரிவிக்கிறது' என்றும் ஊகம் செய்கிறான் இந்தப் பேரறிவாளன்.

அந்தோ! இல்லையே!

இப்படி யெல்லாம் ஊகம் செய்து பார்த்தும் இந்த நெஞ்சிலே ஆறுதல் ஏற்படவில்லை.

என்றெண்ணி, ஈன்(டு) இனியோர்
பயனில்லை என நினையாக்
குன்றன்ன தோளவன் தன்
கோமனைபிற் படப்பெயர்ந்தான்,
நின்றெண்ணி உன்னுவான்,
'அந்தோ! இந் நெடுநகரம்
பொன்துன்னும் மணிப்பூணார்
இலர்!' என்னப் பொருமுவான்.

[ஈண்டு இனி ஓர் பயனில்லை — இனி இங்கே நிற்பதால் ஒரு பயனும் இல்லை. நினையா — நினைத்து, குன்றன்ன தோளவன்தன் — குன்று போன்ற தோள்களையுடைய ராவணனது. கோமனை — அரண்மனை. பிற்படப் பெயர்ந்தான் — பின்னாகும்படி அதைக் கடந்து அப்பால் சென்று. எண்ணி உன்னுவான் — சிந்தித்து ஆலோசிப்பவனாய். பொன் துன்னும் மணிப்பூணார் இலர் — சீதாபிராட்டியார் இல்லையே. என்னப் பொருமுவான் — என்று நெஞ்சு பொருமித் துக்கிப்பவனானான்.]

'ராமன் எதிர்பார்ப்பதென்ன? சுக்கிரீவன் எதிர்பார்ப்பதென்ன ? நான் வந்து சாதித்த தென்ன ?' என்ற எண்ணங்களும், அவர்களுக்குத் தன்மீதுள்ள அபார நம்பிக்கையும் பேரலைகளாக எழுகின்றன :

கண்டுவரும் என்றிருக்கும்
காகுத்தன்; கவிகுலக்கோன்
கொண்டுவரும் என்றிருக்கும்!
யான்இழைத்த கோள்
இதுவால்!

[காகுத்தன் — ராமன். கவிகுலக்கோன்—வானர மகாராஜாவான சுக்கிரீவன். கோள் — செய்கை.]



பி.ஸ்ரீ

415. எரிமலை குளிர்ந்தது, பூமழை பொழிந்தது

சீதையைக் கண்டுபிடிக்க முடியாததால் அனுமன் துக்கித்ததும், கடைசியாக அசோகவனத்தைக் காண்பதும், வால்மீகிக்கே உரிய, இயற்கையாகப் பொங்கும், மனோபாவத்துடன் வருணிக்கப் பெற்றிருக்கும் ஒரு கட்டம்.

உடலிருந்து பார்த்தவர்போல !

'சீதையைக் காணாமல் கிஷ்கிந்தைக்குச் செல்வதால் என்ன பயன்?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான் அனுமன். 'எப்படித் தேடியும் காணவில்லையே என்ற கோர வார்த்தையை ராமனிடம் சொல்லி விட்டால் ராமன் உயிரை விட்டு விடுவானே! அதனால் அனர்த்த பரம்பரை ஏற்பட்டுவிடுமே, அயோத்தியிலும் கிஷ்கிந்தையிலும். நான் போனவுடன் பெருங் கூச்சலும் அழுகையுங் கிளம்பி விடுமே. எல்லாரையும் கொல்ல நான் இங்கிருந்து கிஷ்கிந்தைக்குப் போக வேண்டுமா?'

இந்தத் தனிமையுரை, உயிரை விட வேண்டுமென்ற முடிவிற்குக் கொண்டு போய் விடுகிறது. எனினும் 'நான் இறப்பதில் பல கேடுகள் உண்டு. உயிரோடிருந்தால் என்றாவது நலம் கிடைக்கும்' என்றும் ஆலோசிக்கிறான்.

'பழிக்குப் பழியாக ராவணனைக் கொல்லட்டுமா? அல்லது கட்டிக் கொண்டு போய் ராமனுடைய அடிகளில் போடட்டுமா?' என்ற ஆலோசனையும், துக்கமும் கவலையும் நிறைந்த உள்ளத்திலே தோன்றுகிறது. 'ராமனை இலங்கைக்கு அழைத்து வந்தால் என்ன?' என்ற எண்ணமும் ஏற்படுகிறது.

இப்படியெல்லாம் "எண்ணமிட்டுக் கொண்டே, இந்த நினைவின் வெள்ளத்தில் அப்படியே அமிழ்ந்து போய் விடாமல் முகத்தை வெள்ளத்திற்கு மேலே வைத்துக்கொண்டு பார்ப்பது போல் நாலுபுறமும் கவனித்துப் பார்க்கிறான் அனுமன். திடீரென்று, 'மோசம் போனேனே, என்ன அறிவீனம்! இதோ அசோக மரங்கள் அடர்ந்த சோலையில் இதுவரை நான் தேடவில்லையே' என்கிறான்.

உடனே, 'ராமலட்சுமணருக்கும் சீதைக்கும் தேவதைகளுக்கும் நமஸ்காரம்' என்று சொல்லிவிட்டு, சுக்கிரீவனுக்கும் உள்ளத்தால் வந்தனம் சொல்

லிப் பிறகு அனுமன் அசோக வனத்தின் மதிற் சுவரைத் தாண்டினுன் என்பது ஆதி காவியப் போக்கு.

நிகழ்ச்சிகளை உள்ளும் புறமுமாய் உடனிருந்து பார்த்தவர் போலக் கதை நடத்துகிருர், ஆதி கவி. கதைப் போக்கிற்கு இசைந்தவாறு ரஸிகர்களின் செவிக்கு இன்னமுதமாய் அமைந்திருக்கிறது கவிதை. இனி நாம் கம்பனின் கதைப் போக்கிலே போய்க் கவிதைப் போக்கையும் ஒருவாறு உற்று நோக்குவோம்.

கம்ப சித்திரப் போக்கு

சுக்ரீவன் குறித்த தவணை கழிந்ததும் அங்கதன் முதலிய வானர வீரர்கள், 'மண்ணிலே இனி நமக்கு வேலை இல்லை, விண்ணடைவோம்' என்று ஆலோசித்தார்களல்லவா? அப்போது அனுமன் தானே, 'தவணை தாண்டிப் போனாலும் காரியசித்தி பெற்று மீள்வதே நலம்' என்று சொல்லிக் கடல் தாண்டி வந்தவன். அந்த நினைவு இப்போது நெஞ்சை அடைக்கிறது.

பொருமுகின்ற நெஞ்சு வெடித்துப் போகாமல் புலம்புகிறது :

கன்னியநாள் கழிந்துளவால்;
கண்டிலெனல் கனங்குழையை;
விண்அடைதும் என்ருேரை
ஆன்(டு)இருத்தி விரைந்தயான்,
எண்ணியது முடிக்ககிலேன்,
யான்முடியா(து) இருப்பேனே?
புண்ணியம்என் ஒருபொருள் என்
உழைநின்றும் போயதால்!

[கன்னிய—குறிக்கப்பட்ட. கண்டிலென்—கண்டேனில்லை. கனங்குழையை—(இங்கே) சீதையை. அடைதும்—அடைவோம். ஆண்டு—அங்கேயே. முடிக்ககிலேன்—முடிக்க மாட்டாமற் போனேன். என் உழை நின்றும்—என்னிடத்திலிருந்து. போயதால்—போய்விட்டது போலும்.]

'நான் தற்கொலை செய்து முடிந்து போகாவிட்டால் இந்தத் துன்பமே என்னை முடித்து விடும்!' என்கிருன். சோக நெருப்பாறு தன் வேகத்திலே சற்றுத் தடைபட்டதுபோல், தற்கொலை எண்ணமும் சற்று மட்டுப்படுவது போல் காண்கிறது :

எழுநூறு ருேசனைசூழ்ந்(து)
எயில்கிடந்த(து) இவ்விலங்கை
வாழுமா மன்னுயிர்யான்
காணுத மற்றில்லை;
ஊழியான் பெருந்தேவி
ஒருத்தியையும் யான்காணேன்:
ஆழிதாய் இடராழி
இடையேவிழ்ந் தழிவேனோ?

[நூருேசனை—நூறு யோசனை. எயில்—மதில். மா மன்னுயிர்—சிறந்த பெரிய பிராணிகளில். ஊழியான் பெருந்தேவி—தலைவனுன ராமனது சிறந்த தேவியாகிய சீதை. ஆழி தாய்—கடல் தாவி. இடராழி—துன்பக் கடல்.]

சோக நெருப்பிற்கு மேல் கோப நெருப்பைக் கொட்டுகிறது பொருமிப் புகையும் எரிமலை. சில போலீஸ் வீரர்கள்—புலன் விசாரித்துக் குற்றத்தைக் கண்டுபிடிக்க முடியாதவர்கள்—குற்றவாளியைச் சித்திரவதை செய்து உண்மையைக் கண்டுபிடிக்கப் பார்ப்பது போல், அனுமனும் கோபாவேசத்திலே 'ராவணனைக் கன்னத்தில் அறைந்து சீதையைக் காட்டச் சொல்லலாமா? இரத்தம் கக்கச் செய்து உண்மையையும் கக்கச் செய்துவிடலாமா?' என்று கூட ஆலோசிக்கிருன்.

'லங்கையும் லங்கேசனும் உருகிப் போகுமாறு தீ வைத்து விடலாமா?' என்று, பின்பு நேரிடப்போகும் லங்கா தகன ஆலோசனை கூட எவ்வளவு கோரமாக உருவாகிறது அனும கோபாவேசத்திலே :

வல்லரக்கன் தனைப்பற்றி
வாயாறு குருதிஉகக்
கல்அரக்கும் கரதலத்தால்
காட்டென்று காண்கேனே?
எல்அரக்கும் அயில்நுதிவேல்
இராவணனும் இவ்வூரும்
மெல்அரக்கின் உருக்கிஉக
வெந்தழலால் வேய்கேனே?

[வல் அரக்கன் — கொடிய ராவணன். வாய் ஆறு — வாய் வழியாக. குருதி உக — இரத்தம் பெருக. கல் அரக்கும் — கல்லையும் அழிக்கவல்ல. எல் — சூரிய ஒளி. அயில் நுதி — கூரிய நுனி. மெல் அரக்கின் — மென்மையான அரக்குப் போல. உருக்கி உக — உருகிக் கரையும்படி. வேய்தல் — மூடுதல்.]

ஆனால் ராவணனிடம் மோசமான 'போலீஸ்' முறைகள் பலிக்குமா? அவ்வளவு லேசான காரியமா? சீதையின் இருப்பிடத்தைத் தெரிந்து கொள்ளாமல் லங்காதகனம் செய்வதுதான் புத்திசாலித்தனமா?

சுயமரியாதை எங்கே?


இது நிற்க, ராவண ராஜ்யத்தில் எவ்வளவோ அதிருப்தி கொண்டிருக்கும் தேவர்கள் இருக்கிறார்களே, அவர்களாவது சீதையைக் காட்டிக் கொடுக்கலாகாதா?

வானவரே முதலோரை
 வினவுவெனேல், வல்அரக்கன்
தான்ஒருவன் உளனாக
 உரைசெய்யும் தருக்கிலரால்!

[வினவுவெனேல் — விசாரிப்பேனானால். தருக்கு — பெருமை; (இங்கே) சுய மரியாதை.]

என்று எண்ணமிடும் அனுமன் தன் மதிப்பை இழந்திருக்கும் தேவர்களிடம் ஒரு விதமான உதவியையும் எதிர்பார்க்கவில்லை.

கொடிய லங்கேசனுக்கு அடிமைகளாக இருக்கும் தேவர்களிடம் சுய மரியாதை ஏது? அரக்கர்களோ பிறருக்கு அவமரியாதை விளைப்பதையே சுயமரியாதையென்று கருதுகிறவர்கள். இந்த நிலையில் உண்மையான சுயமரியாதை தான் எங்கே? சிறையில் இருக்கிறது



சிதை வடிவிலே என்று கண்டுபிடிக்கப் போகிறான் அனுமன்.

வானவரிடம் 'தருக்கு' இல்லை. இரக்கமிலா அரக்கரிடத்திலோ 'தருக்கு' பெருஞ் செருக்காகி நெருக்கி ஹிம்ஸிக்கிறது உலகத்தையெல்லாம். சிதையின் சிறையைத்தான் 'தருக்கு உயர் சிறை' (பெருமையிலே உயர்ந்த சிறை) என்று கண்டு ராமனிடம் அப்படியே அறிவிக்கப் போகிறான் அனுமன்.

ஆனால் இப்போது, அந்தத் 'தருக்கு உயர் சிறை'யை இன்னும் கண்டுபிடிக்காத நிலையில், சோகமும் கோபமும் மாறி மாறித் தாபம் விளைப்பதைத் தவிர வேறு வழியொன்றும் தெரியவில்லை!

சோகமும் கோபமும் உச்ச நிலைக்கு வந்து விடுகின்றன;

'வடித்தாய்பூங் குழலாளை
வானறிய மண்ணறியப்
பிடித்தான்இவ் அடல்அரக்கன்
எனும்மாற்றம் பிழையாதால்;
எடுத்(து)ஆழி இலங்கைதனை
இருங்கடலின் இட்(டு)இவனை
முடித்தாலே யாள்முடிதல்
முறைமன்ற!' என்றுணர்வான்.

[வடித்து ஆய் பூங்குழலாளை — தேர்ந்தெடுத்த பூக்களைச் சூடிய கூந்தலையுடைய சீதையை. அடல் அரக்கன் — கொடிய ராவணன். மாற்றம் — வார்த்தை. பிழையாது — தவறாது. ஆழி இலங்கை — கடல் சூழ்ந்த இலங்கை. இருங்கடலின் — பெரிய கடலுக்குள்ளே. முடித்தாலே — முடித்த பின்பே. மன்ற — நிச்சயமாய்.]

'நம் செயலால் ஆவதொன்றில்லை' என்று உன்னமானது உள்ளுறையும் அழகனுக்கு (கடவுளுக்கு)ச் சரணாகதி செய்கிறது, 'எல்லாம் அவன் செயல், எல்லாம் அவன் அருள்' என்ற உள்ளுணர்வுடன் உடம்பு அவனது கைங்கரியத்திலே தொழிற்பட்ட வண்ணமாயிருக்கிறது.

இத்தகைய நிலையில் தென்படுகிறது அசோகவனம்:

எள்உறையும் ஒழியாமல்
யாண்டையினும் உளனாய்த்
தன்
உள்உறையும் அழகனைப்போல்
எம்மருங்கும் உலாவினான்;
புள்உறைஉய் யானத்தை
உறநோக்கி அயல்போவான்,
கள்உறையும் மலர்ச்சோலை
அயல்ஒன்று கண்ணுற்றான்.

[எள் உறையும் — எள்ளளவு இடமும். யாண்டையினும் — எல்லா இடத்திலும். எம்மருங்கும் — எல்லா இடங்களிலும். புள் உறை — பட்சிகள் தங்குகின்ற. உய்யானத்தை — உத்தியான வனத்தை. அயல் போவான் — அப்பால் போகிறவன். கள் உறையும் — தேன் பொருந்திய.]

ராவண பத்தினியர்களின் சிங்காரப் பூஞ்சோலையிலும் ஏற்கெனவே தேடியிருந்தான். கடைசியாக ஒரு முறை 'உற நோக்கி' — அதாவது மிகுதியாகத் தேடிப் பார்த்து விட்டு, — அப்பால் போகிறான். அப்போது, சமீபத்தில் மறைவாக இருந்த ஒரு சோலை கண்ணுக்கு இலக்காகிறது.

உள்ளே பிரவேசிக்கிறான். உடனே அடிமைத் தேவர்களும் மகிழ்ச்சி மிகுதியால் தங்களை மறந்து அனுமன் மீது பூ மழை பொழிகிறார்களாம்:

என்று சோலைபுக்(கு)
எய்தினன் இராகவன்—
தூதன்
ஒன்றி வானவர்
பூமழை சொரிந்தனர்,
உவந்தார்!

[சோலை புக்கு — சோலை போய். ஒன்றி — ஒன்றாகக் கூடி வான வீதியில் நின்று.]

காணாதது கண்ட குதூகலத்திலே அனுமன் மட மட வென்று அசோக வனத்திற்குள் புகுந்ததும், பூத்துக் குலுங்கிய செடி கொடிகளும் பூ மரங்களும் பூமாரி சொரிகின்றன. 'வானம் பூச் சொரிந்தது, வானவர் பூச்சொரிந்தார்!' என்று குதூகலப் படுகிறது கவியுள்ளம்.




பி.ஸ்ரீ

416. பெருங் கதையின் தொடக்கம்

ராமாயணம் ஸாராம்சத்தில் சீதையின் பெருங்கதைதான் என்பர். அதாவது, ராமாயணம் 'சீதாயகமே' யென்பர். சிறையிருந்தவள் ஏற்றம் சொல்வதுதான் ராமாயணம் என்று பக்த ரஸிகர்கள் கூறுவதுண்டு. இது ராமாயணத்தின் அதி முக்கிய காண்டமான சுந்தர காண்டத்திற்கு விசேஷமாய்ப் பொருந்தும். 'சிறையின் எய்திய செல்வி'யாகச் சீதையை இக் காண்டத்தில் தானே காண்கிறோம்.

பால காண்டத்திலே மிதிலைச் செல்வி காதலியாகவும் மணமகளாகவும் தோற்றமளிக்கிறாள். அடுத்த அயோத்யா காண்டத்திலே ஜனககுல சுந்தரி அயோத்திச் செல்வியாக, இக்ஷ்வாகு குல சுந்தரியாக இல்லறம் நடத்திக் கணவனுடன் காடு செல்வதைக் காண்கிறோம். காடுறை செல்வியை ஆரண்ய காண்டத்திலே பார்க்கிறோம்.

சுந்தர காண்டத்திலேதான் காடுறை செல்வி சிறை புகுந்த செல்வியாகி ஆத்ம ஐசுவரியமே உருக்கொண்டது போல் ஐசுவரியம் நிறைந்த போகபூமியை பகைப்புலனாகக் கொண்டு காட்சி யளிக்கிறாள்.



பிரமிக்கத் தக்க அனும பராக்கிரமத்தைப் பார்த்து விட்டு அனுமனைச் சுந்தர காண்டத்தின் காவிய நாயகன் என்று சாதாரணமாய்க் கூறுவதுண்டு. ஆனால் அனுமனது போராண்மையும் குணாதிசயங்களும் சீதையின் குணாதிசயத்திற்குப் பின்னணி தான்.

சிறை யிருந்த செல்வியின் பெருங் குணத்தையும் பெருங்கதையையும் சித்திரிப்பதற்கு மகாகவிகளான வால்மீகியும் கம்பனும் அனும வீரத்தைப் பின்னணியாகவும், பொருளும் போகமும் வேகமும் நிறைந்த ராவண ராஜதானியைப் பகைப் புலனாகவும் கொண்டிருக்கிறார்கள்.

காந்தியடிகள் இந்தியாவில் தாம் நிலை நாட்ட விரும்பிய அஹிம்ஸா ராஜ்யத்தை ராமராஜ்யம் என்று கூறுவதுண்டல்லவா? சிறை யிருந்த செல்வியை விசேஷமாக உள்ளத்தில் கொண்டுதான் காந்தியடிகள் அப்படிக் கூறியுள்ளார் என்று கருதுவது தவறாகாது.

இத்தகைய சீதா தேவியைத் தேடுவதும், காண்பதும், தேற்றுவதும், அந்த அரக்கர் பேரூரில் தன் திறன் விளங்கச் செய்வதும் ஆகிய

அனுமனது நாற்பெருஞ் செயல்களைத் தானே சுந்தரகாண்டத்தில் காண்கிறோம்? எனவே இக் காண்டத்தை நான்கு பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு விமர்சனம் செய்கிறார் ரஸிகரான திரு. டி. சுந்தராசாரியார்.

காணும் பகுதி (வால்மீகியில்)

முதலாவது பகுதியாகிய தேடும் பகுதி முடிந்து விட்டது. இனி வருவது அனுமன் சீதையைக் காணப் போகும் பகுதி. இப் பகுதியிலும் வால்மீகியின் கதையும் கவிதையும் அதிசுந்தரமாக அமைந்திருக்கின்றன.

அனுமன் அசோகவனத்திற்குள் புகுந்தான். அதன் அழகுகளைக் கண்டான். ராவணன் சீதையைச் சிறை வைத்தது கொடுஞ்செயலாக இருந்த போதிலும் இவளைச் சிறை வைப்பதற்கு அவன் தேர்ந்தெடுத்த சிங்காரத் தோட்டம் அனுமனுடைய ரஸிக உள்ளத்தை வசிகரித்தது.

விசித்திரமான குளங்களையும் நவரத்தின மயமான படிகளையும், அந்த நீர்நிலைகளில் மலர்ச்சி பெற்றிருந்த தாமரை கருநெய்தல் முதலிய பூக்களையும், மதுரமாய்க் கூவிக் கொண்டிருந்த நீர்ப்பறவைகளையும் அனுமன் கண்டான். கரைகளிலே இடைவெளி இல்லாமல் செழித்து வளர்ந்த மரங்களையும் புதர்களையும் கண்டான்.

விசித்திரமான கொடுமுடிகளையுடைய ஒரு கிரீடா பர்வதம் (செய்குன்று) கற்பாறைகளால் அமைந்த அறைகளுடனும் விருட்ச ஜாலங்களுடனும் மனோகரமாக விளங்கிற்று. அம் மலையிலிருந்து ஒரு நதி, காதலனுடன் கோபித்து அவன் மடியிலிருந்து குதித்தோடும் யுவதிபோல் கீழே விழுந்தது.

அவளுடைய தோழிகளும் உறவினரும் 'போக வேண்டாம்' என்று தடுப்பது போல் ஆற்று நீரில் நனைந்த நுனிகளுடன் பல மரங்கள் காணப்பட்டன. அம் மரங்களால் தடுக்கப்பட்ட தண்ணீர் எதிர்த்து வந்தது, கோபம் தணிந்து திரும்பி வரும் காதலி போலே.

இயற்கை வருணனை எவ்வளவு வசிகரமாய்ப் போகிறது பாருங்கள்!

பூக்களாலும் பழங்களாலும் விளங்கிய சில பெரிய மரங்களுக்கு நாற்புறமும் விஸ்தாரமான மேடைகள் கட்டப்பெற்றிருந்தன. அங்கே சிம்சுபா விருட்சமொன்று [நூக்கு மரம்) கொடிகளாலும் இலைகளாலும் சூழப்பட்டு விளங்கியது. அந்த மரத்தில் ஏறி அனுமன் ஆலோசிக்கலானான்.

'சீதை ஒரு வேளை இங்கு வரக்கூடும். ராமனைப் பிரிந்திருக்கும் அந்தத் தாபத்தைப் போக்குவதற்காக, அல்லது அந்த நதியில் காலை ஸந்தியாதேவதையை உபாசிக்க வருவாள்' என்று எண்ணி அந்த மரக் கிளைகளில் மறைந்து கொண்டான், தன் வடிவை மிகவும் சுருக்கிக் கொண்டு.

அப்போது அருகிலுள்ள உபரிகையில் ஒரு ஸ்திரீயைக் கண்டான். அவளைச் சுற்றி அரக்கிமார் கண்கொட்டாது காவல் செய்தனர். அவளோ துரும்பு போல் இளைத்திருந்தாள். யுவதிகளுக்கு உரிய அணிகள் இல்லை. கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகிக் கொண்டிருந்தது. துக்கம் தவிர வேறு கதியில்லாதவள். அவள் படும்பாட்டைப் பார்த்துக் கருங்கல்லும் உருகும்.

'அரக்கியர் நடுவே, தன் இனம் விட்டுப் பிரிந்த பெண்மான். நாய்களால் சூழப்பட்டது போல் இருந்தாள் சீதை' என்று சொல்லும் கவிஞர் வேறு உபமானங்களையும் அள்ளி வழங்குகிறார்.

புகை மூடிய அக்கினி ஜ்வாலை போலிருந்தாள். சந்தேகமான அர்த்தங்களையுடைய ஸ்மிருதிவாக்கியம் போலிருந்தாள். நம்பிக்கை யில்லாத சிரத்தை போலவும், நிறைவேறாத ஆசை போலவும் இருந்தாள். விக்கினங்களால் தடைப்பட்ட காரியசித்தி போலவும் இருந்தாள். அநியாயமான அபவாதத்தால் கெடுக்கப்



பட்ட கீர்த்தி போலவும் இருந்தாள். நீருண்ட மேகங்களால் மறைக்கப்பட்ட சந்திரகாந்தி போலவும் இருந்தாள். எத்தனைய வசீகரமான எத்தனை உபமான அடுக்குகள்!

அனுமன் அவளை சீதையென்று தெரிந்து கொண்டான். 'ராவணன் அன்று வெகு விரைவுடன் ஆகாய மார்க்கமாய்த் தூக்கிக்கொண்டு போகையில் எவளைக் கண்டேனோ அவளுக்கும் இவளுக்கும் உருவத்தில் வேற்றுமை இல்லை. கவனிக்கையில் அவள் என்றே தோன்றுகிறது' என்று எண்ணமிடுகிறான்.

ஆடையாபரணங்கள் போன்ற அடையாளங்களாலும் ராமன்தேவி இவளே என்று நிச்சயித்தான். இப்படிச் செல்லுகிறது வால்மீகியின் கதைப் போக்கு. ஒப்பற்ற வசீகர இயற்கை வருணனை சீதையின் சோக சித்திரத்திற்கு வசீகரமான பகைப் புலனாகிறது.

கம்ப சித்திரம் வேறு

கம்பனோ அசோக வனத்தின் அழகுகளைச் சிறிதும் வருணிக்காமலே சீதையின் நிலையைக் காட்டுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கிறான். கம்பனுடைய அனுமன், வனத்தின் இயற்கையழகுகளைச் சிறிதும் கவனிக்காமல் சீதையைக் கண்டு பிடிக்கவே முயல்கிறான்.

'கள்ளுறையும் மலர்ச் சோலை' (கள் = தேன்) என்றும், 'மணி மலர்ச் சோலை' யென்றும் குறிப்பிட்டு, பளிச் சென்று சீதையை வருணிக்கத் தொடங்குகிறான்.

அனுமன் சோலைக்குள்ளே போய்ச் சேர்ந்து வானவர் பூ மழை பொழிந்ததை ஒரு பாட்டின் முதல் இரண்டு அடிகளில் குறிப்பிட்டு அதே பாட்டின் பிற்பகுதியில்,

அன்(று)அ வாள்அரக்-
கன்சிறை அவ்வழி
வைத்த
துன்(று)அல் ஓதிதன்
நிலையினைச் சொல்லுவான்
துணிந்தாம்

[அ வாள் அரக்கன் - ஆயுதங்களையுடைய அந்த ராவணன். அவ்வழி - அந்தச் சோலையில். தன்று அல் ஒதி தன் - நெருங்கின இருள் போலக் கரிய கூந்தலோடு கூடிய சீதையின். சொல்லுவான் துணிந்தாம் - சொல்லத் துணிந்தோம்.]

என்ற பீடிகையுடன் சீதையின் சோக சித்திரத்தை எழுதத் தொடங்கி விடுகிறான்.

அசோக வனத்தின் வளமும் வனப்பும் மாயமாக மறைந்து போகின்றன. நெருக்கமான கற்பாறைக்கிடையே ஒரு பச்சிலை தான் தெரிகிறது.

அபூர்வமான மருந்துப் பச்சிலை. தாராளமாக வேரோடி இலை வீச வசதி இல்லை. தண்ணீர் விட்டு வளர்ப்பவரும் இல்லை. ஒரு மழைத்துளியாவது அதன் மேல் விழவும் இல்லை.

கண்ணீர் வார்க்கும் மூலிகையாக இருக்கிறாள் சீதை அசோக வனத்திலே:

வல்ம ருங்குல்வாள்
அரக்கியர் நெருக்கஅங்(கு)
இருந்தாள்,
கல்ம ருங்(கு)எழுந்(து)
என்றும்ஓர் துளிவரக்
காணு
நன்ம ருந்துபோல்
நலன்அற உணங்கிய
நங்கை
மென்ம ருங்குல்போல்
வேறுள அங்கமும்
மெலிந்தாள்.

[வல் மருங்குல் - வலிமையான இடை. கல் - (இங்கே) கற்பாறை. மருங்கு - இடையே. நலன் அற - அழகு கெட. உணங்கிய - வாடிய. நங்கை - சீதை. மென் மருங்குல் போல் - மெல்லிய (தன்) இடைபோல.]

அரக்கியர் நெருங்கிக் காவல் செய்யச் சீதை புலிக் கூட்டத்தின் நடுவே அகப்பட்டுக் கொண்ட மானைப் போல் இருக்கிறாளாம். தன் இனத்தை விட்டுப் பிரிந்த பெண்மான் நாய்கள் நடுவே அகப்பட்டுக் கொண்டது போலச் சீதை காணப்பட்டாள் என்ற வால்மீகி முனிவரின் அந்த உபமானத்தைத் தழுவியதுதான்.

வெயிலில் ஏற்றி வைத்த விளக்கைப் போலவும் இருக்கிறாளாம் :

துயிலெனக் கண்கள்
இமைத்தலும் முகிழ்த்தலும்
துறந்தாள்,
வெயிலிடைத் தந்த
விளக்கென ஒளியிலா
மெய்யாள்,
மயில்இ யல்குயில்
மழலையாள், மான்இளம்
பேடை
அயில்எ யிற்றுவெம்
புலிக்குழாத்(து) அகப்பட்ட(து)
அன்னாள்.

[துயிலென - தூக்கமென்று. முகிழ்த்தல்-மூடுதலும். இமைத்தலும் - (இங்கே) கண்விழித்து இமைத்தலும். மெய்யாள் - உடம்புடையவள். மயில் இயல் குயில் மழலையாள் - மயில் போன்ற சாயலையும் குயிலின் குரல் போன்ற இனிய சொற்களையும் உடையவள். மான் இளம் பேடை - ஒரு இளம் பெண்மான். அயில் எயிற்று வெம்புலிக் குழாத்து - கூர்மையான பற்களையுடைய கொடிய புலிகளின் கூட்டத்தினிடையே. அன்னாள் - ஒத்தாள்.]

இப்படிச் சாதாரணமாகவே தொடங்கும் சித்திரத்தை மேலும் பார்ப்போம். இது தானே சீதையின் சோகப் பெருங் கதையிலே அதி முக்கியமான பகுதி?



பி.ஸ்ரீ

417. ‘ ஓவியம் புகையுண்டது ’

ஏழு காண்டமுள்ள ராமாயணத்தில் கம்பன் பாடியவை ஆறு காண்டங்களே, கம்ப சித்திரத்திற்கு இசையாதது உத்தரகாண்டம் என்னும் ஏழாவது காண்டம்.

கம்பனது நாடகத் திறனுக்கு இசைந்தவாறு ராமாயணம் ஆரம்பமாக வேண்டியது அயோத்திய காண்டத்திலே தான். இங்கு தானே மந்திராலோசனையும் சதியாலோசனையும் சீராடிப் போராடிச் சீதையையும் ராமனையும் காட்டுக்கு அனுப்பி வைக்கின்றன? அது தானே சீதை சிறையிருப்பதற்கும், ராவணன் வதமாவதற்கும் காரணமாகிறது?

கவிச் சிற்பத் திறன்

கவிச்சக்ரவர்த்தியோ தன் காவிய அரண்மனைக்குப் பாலகாண்டத்தையும் முன்வாசற் பூஞ்சோலையாக அமைத்துக்கொண்டான். அவதாரம், திருமணம் என்ற இரு பெரு நிகழ்ச்சிகளுடன் வேறு பல விஷயங்களையும் சேர்த்துக் காண்டத்தின் அளவைப் பெருக்கிக் கொண்டான். திருமணத்தைச் சீதையின் காதலுக்கு வெற்றியாக்கியவன், ராமாயணத்தையே சீதை காதலின் முழு வெற்றியாக வளர்த்திருக்கிறான்.

மூன்றாவது காண்டத்திலே சீதையை ராவணன் அபகரித்துக் கொண்டு போகிறான். நான்காவது காண்டத்தைக் காவிய அரண்மனையின் இன்றியமையாத பகுதியென்று கருத இயலாது; எனினும் இங்கே ராம ராவண யுத்தத்திற்கு உதவியாகும் வானர வீரர்களைச் சந்திக்கிறோம். சீதையைத் தேடப் போகும் அனுமனையும் இங்கே தான் சந்திக்கிறோம்.

ஐந்தாவது காண்டமாகிய சுந்தர காண்டத்திலே தான் காவிய நாயகியின் குண சௌந்தரியம் — சிறப்பாகத் தியாக சௌந்தரியம்—தனக்குரிய முழுத்தோற்றத்திலும் காட்சி யளிக்கிறது.

சிறையிருந்த செல்வியின் சோக சித்திரம் கண்டு, ராவணன் மீது ‘தர்ம’ கோபம் பொங்கித் துடிக்கிறது வாசகருள்ளத்திலே. இது யுத்த காண்டத்திற்கு ஒரு சக்தி வாய்ந்த தோற்றுவாயாகிறது.

சீதையின் காதலும் கற்புக் கனலும் அனுமனைக் கருவியாகக் கொண்டு இலங்கையைச் சுட்டு, ராமனைக் கருவியாகக் கொண்டு ராவணாதி ராட்சஸர்களை அழித்து விடுவதையும் காண்கிறோம். கம்பராமாயணம் என்ற காவிய அரண்

மனையில் சுந்தரகாண்டம் எவ்வளவு பொருத்தமாக அமைந்திருக்கிறது!

அனுமன் சீதையைத் தேடிக் காண்பதும், ராவணன் சீதையைச் சந்திப்பதும், சீதையின் சோகம் அவநம்பிக்கையாகப் பரிணமித்துத் தற்கொலையில் தன்னை முடித்துக் கொள்ளப் பார்ப்பதும், அனுமன் கணையாழி காட்டி நம்பிக்கை காட்டுவதும், பிறகு அசோக வனத்தை அழித்துக் கிங்கர வதம் முதலியன செய்வதும், பிறகு பிடிபட்டு விடுபட்டு லங்கா தகனம் செய்வதும், திரும்பி வந்து செய்தி சொல்வதும், ஒன்றன் பின் ஒன்றாகக் கிளைத்து வளர்ந்து படர்ந்து வருகின்றன. இந்த அழகைக் கவிச்சிறப்புத் திறனுக்கு ஒரு சிறப்பான வெற்றியென்றே சொல்ல வேண்டும்.

ஓவியம் உருவாகிறது

'செஞ்சொற் கவி யின்பம்' என்று பாலகாண்டத்திலே அறிமுகம் செய்விக்கப்படும் காவிய நாயகி, அயோத்தியா காண்டத்திலேயே காதலனுடைய வாழ்க்கைத் துயரங்களைப் பங்கு போட்டுக் கொள்ள முன் வந்து விட்டாள். ஆனால் காதலனுடன் இருக்கும் வரையில் துன்பங்களெல்லாம் துன்பங்களாகவே தோன்றவில்லை.

மரவுரி கட்டியவளாய் ஆரணிய வாசம் செய்த காலத்திலும், கணவனைப் பிரியும் வரையிலும் கம்பனது காவிய நாயகி துன்பத்தை உள்ளவாறு உணர்ந்து கொண்டதாகத் தோன்றவில்லை.

ராவணன் தன் காம இச்சையை வெளியிட்டதும் சீதை பயந்து காதைப் பொத்திக் கொண்டாள். எனினும் ராமனுடைய வீர பத்தினியாகவே பேசி ராவணனைப் பயமுறுத்தப் பார்த்தாள். அவன் காலில் விழுந்ததும் இவள் நடுங்கிப் போனாள்.

அவன் பர்ணசாலையுடன் இவளை ஆகாய மார்க்கமாகத் தூக்கிச் சென்று சிறை வைத்த பின், சீதையின் சோக சித்திரம் கம்ப சித்திரத்திலே அதி முக்கியமான இடம் பெறுகின்றது. எனவே அசோக வனத்தில் இயற்கையழகுகளையும் வர்ணிக்காமல் கம்பன் சோக சித்திரம் அமைக்கத் தொடங்கி விடுகிறான்.

ஒவ்வொரு நிமிஷமும் யுகமாய்க் கழிகிறது சீதைக்கு. இவளது மனத் திண்மையையும் ஆத்ம சக்தியையும் சிறைவாசம் சிதைத்து விடும் என்று நம்பியிருக்கிறான் அரக்கர்கோன். அந்த நம்பிக்கை வீணாகப் போனாலும், சீதைக்குத் தப்பும் வழி யில்லையே என்ற அவநம்பிக்கை வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது.


காவல் செய்யும் அரக்கியர் பயமுறுத்தியும் கெஞ்சியும் பார்க்கவே, சீதையின் துயரம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது:

> விழுதல், விம்முதல்,
> மெய்யுற வெதும்புதல்,
> வெருவல்,
>
> எழுதல், ஏங்குதல்,
> இரங்குதல், இராமனை
> எண்ணித்
>
> தொழுதல், சோருதல்,
> துளங்குதல், துயர்உழந்(து)
> உயிர்த்தல்,
>
> அழுதல் அன்றிமற்(று)
> அயல்ஒன்றும் செய்குவ(து)
> அறியாள்.

[மெய்யுற வெதும்புதல்-உடம்பு மிகவும் வெப்பமடைதல். வெருவல்-அஞ்சுதல். இரங்குதல்-பரிதவித்தல். சோருதல்-தளர்தல். துளங்குதல்-நடுங்குதல். துயர் உழந்து உயிர்த்தல்-துயரத்தால் வருந்திப் பெருமூச்சு விடுதல்.]

ஆரம்பத்திலேயே சீதையின் சோகத்தை ஒரு பார்வையில் இப்படி ஒரு முழுத் தோற்றமாகக் காட்டி விட்டு, இந்தச் சித்திரத்தைப் படிப்படியாக நம் அகக் கண் முன் வளர விடுகிறான் கவிஞன்.

'அதோ பாருங்கள், பிரிவுத் துயரம் உருவம் பெற்று வருவதை!' என்று இப்போது ஒரு பார்வை பார்க்க அனுமதிக்கிறான்:



அரிய மஞ்சினொ(டு)
அஞ்சனம் முதல் இவை
அதிகம்
கரிய காண்டலும்,
கண்ணினீர் கடல் புகக்
கலுழ்வாள்,
உரிய காதலின்
ஒருவரோ(டு) ஒருவரை
உலகில்
பிரிவெ னும்துயர்
உருவுகொண் டால்அன்ன
பிணியாள்.

[அரிய மஞ்சினொடு - அருமையான மேகமும். அஞ்சனம் - மையும். கரிய காண்டலும் - கருநிறப் பொருள்களைக் கண்ட மாத்திரத்தில் (ராமனது மேனியை நினைத்துக் கொண்டு). கலுழ்வாள் - அழுவாளாகிய சீதை. காதலின் - காதலையுடைய. உருவு கொண்டால் அன்ன - உருவெடுத்து வந்தாற் போன்ற.]

காதலனோடு துன்பமும் இன்பமாய்க் கழித்த அந்த நாள் நினைவிற்கு வரவே

அவரொருவர் நாமொருவர்
ஆனதொரு காலம்

என்ற நினைவு ஒரே துன்பமாக அலை மோதி வருகிறது.

துயரக் கண்ணீரால் நனைந்த மெல்லிய ஆடை மேனி வெப்பத்தாலும் பெரு மூச்சுக் காற்றினாலும் உலர்ந்து போவதும், மறுபடியும் கண்ணீரால் நனைந்து போவதுமாய்க் காண்கிறதாம். காதலனது திருமேனியை எண்ணும்போதெல்லாம் ஏற்படுகின்ற நிலை இது எனக் காட்டுகிறான் கவிஞன்.

திடீரென்று அழுத கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பார்க்கிறாள். திசைகளை யெல்லாம் அளப்பது போல எவ்வளவு ஆவலாய்ப் பார்க்கின்றன கண்கள்!

'அரிது போகவோ
விதிவலி கடத்தல்' என்(று)
அஞ்சிப்,
'பரிதி வானவன்
குலத்தையும் பழியையும்
பாரச்
சுருதி நாயகன்
வரும்,வரும்!' என்பதோர்
துணிவால்
கருதி. மாதிரம்
அனைத்தையும் அளக்கின்ற
கண்ணாள்.

[பரிதிவானவன் குலத்தையும் - சூரிய குலத்தையும். பாரா - பார்த்து. சுருதி நாயகன் - வேதங்களுக்குத் தலைவனாகிய ராமன். மாதிரம் அனைத்தையும்-எல்லாத் திசைகளையும்.]

'தப்பிப் போவதோ அரிது, விதியின் வலிமையைக் கடப்பதும் இயலுமோ?' என்ற எண்ணத்திலே விளைந்து கொண்டிருக்கும் அச்சத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு, ஏதோ ஒரு புதிய நம்பிக்கை பெற்றவளைப் போலச் சீதை நாலு திசைகளையும் அளந்து பார்ப்பது போலப் பார்க்கிறாள். 'எந்தத் திசைக் கோணத்திலிருந்தாவது காதலன் வந்து குதித்து விடுவானோ?' என்பதாக.

இவள் மீது காதலால் வரவில்லை யென்றாலும் தன் சொந்தக் குலப் பெருமையையும் பழியையும் பார்த்தாவது வந்து சேர வேண்டுமல்லவா? 'மனைவியையும் காக்க முடியாத சூரிய குல மன்னன்!' என்ற ஏச்சுக்காவது அஞ்சி வர வேண்டாமா?

உருவாகிப் புகையாகி!

மிதிலைச் செல்வியாகிய சீதையின் சித்திரம் காதற்கடவுளான மன்மதனாலும் எழுதிப் பார்க்க இயலாதது என்பது பாலகாண்ட வருணனை:

ஆதரித்(து) அமுதில்
கோல்தோய்த்(து), 'அவயவம்
அமைக்கும் தன்மை
யாதெனத் திகைக்கும்
அல்லால் மதனற்கும்
எழுத ஒண்ணாச்
சீதை.

[ஆதரித்து-சிரத்தையுடனும் ஒருமையுள்ளத்துடனும் கூடிய அன்போடு. கோல்-சித்திரம் எழுதுகோல். மதனற்கும்-மன்மதனுக்கும்.]

மன்மத ஓவியன் அப்படியே ஏகாக்கிர சித்தத்தில் தன்னை முழுக்க இழந்து தேய்ந்து மாய்ந்து 'அனங்கவேள்' ஆகி விட்டான். அதாவது, அங்கமில்லாத மன்மதனாகிவிட்டான். இந்த அனங்கன் அந்த மன்மதன் செய்யாத காரியத்தைச் செய்து முடித்து விட்டானும். அந்த ஓவியம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது?

தேவு தெண்கடல்
அமிழ்து கொண்(டு)
அனங்கவேள்
செய்த
ஓவி யப்புகை
கண்டதே ஒக்கின்ற
உருவாள்.

[தேவு தெண்கடல் அமிழ்து கொண்டு-பாற்கடலில் தெளிந்து தோன்றிய தேவாமிர்தத்தில் எழுது கோல் தோய்த்து.]



பி.ஸ்ரீ

418. நினைவு வெள்ளம்

(அறிவுத் திறனும் அருட் கவிதையும்)

கவலை தோய்ந்த, அவநம்பிக்கை படர்ந்த உள்ளத்திலே பழைய நினைவுகள் படையெடுத்து வருகின்றன. 'தம்பி போனாரே தமையனைத் தேடிக் கொண்டு, அண்ணாவைக் காணவே இல்லையோ?' என்று ஒரு கணம் கருதினாள் சீதை.

அடுத்த கணமே, அண்ணாவும் தம்பியும் சந்தித்து விடுகிறார்கள். ஆனால் 'கடலுக்கிடையே இந்தத் தீவு ஒன்று இருக்கிறது என்பது எப்படித் தெரியும்? ராவணன் என்னைக் கவர்ந்து போன செய்திதான் தெரிந்திருக்க முடியுமா?' என்று எண்ணங்கள் தோன்றுகின்றன. தோன்றவே,



புண்தி றந்(து)
அதில்
எரிநுழைந்
தாலெனப்
புகைவாள்.

[புண்திறந்து அதில் எரி நுழைந்தால் என - வாய் திறந்த புண்ணில் கனல் நுழைந்தாற் போல.]

'அவர்களுக்கு எப்படித்தான் என்னைப் பற்றிய செய்தி தெரிந்திருக்கும்? ஜடாயு மாமாவோ இறந்து போய் விட்டார்!' என்று விம்மினாள், கலங்கினாள்:

மீண்டு மீண்டுபுக்(கு)
எரிநுழைந் தாலென
மெலிவாள்.

[மீண்டுமீண்டு புக்கு எரிநுழைந்தால் என — மீண்டும் மீண்டும் புண்ணிலே கனல் நுழைந்து புகுந்தாற்போல.]

வேறொரு எண்ணமும் தோன்றுகிறது. 'தீச் சொல் சொல்லியல்லவா நான் தம்பியை அனுப்பினேன்? அது கேட்டு, அவ்வளவு அறிவில்லாதவளைத் துறந்து விடுவோம் என்று தான் எண்ணி விட்டாரா?'

என்னே, நாயகன்
இளவலை எண்ணலா
வினையேன்
சொன்ன வார்த்தைகேட்(டு),
அறிவிலள் எனத்துறந் —
தானோ ?

[நாயகன் - கணவன். இளவல் - தம்பியை. எண்ணலா-முன்பின் எண்ணிப் பாராமல் மதிப்புக் குறைவாக.]

எவ்வளவு கொடிய சந்தேகம் ! ஆதி காவியத்திலே சீதை லட்சுமணனுக்குக் கற்பிக்கும் தீய நினைப்பைக் கம்பன் எவ்வளவோ மட்டுப் படுத்திச் சீதை குணநிசயத்திற்கும் லட்சுமணனுடைய குணநிசயத்திற்கும் பொருந்தச் செய்திருக்கிறான். அப்படி யிருந்தும் தம்பியைச் சிறிதும் மதிக்காமல் பேசி விட்டோமே என்பதாகத் துடிக்கிறாள், காவறண்டு, உணர்வு தேய்ந்து.

இத்தனை கவலைகளுக்கிடையே, துயரங்களுக்கிடையே, வேறொரு வருத்தமும் ஏற்படுகிறது, சற்று விநோதமாகவே. பாருங்கள் : லட்சுமணன் காய் கனி கிழங்கு கீரை வகைகளைத் தேடிப் பக்குவப் படுத்தி வைத்திருக்கிறான். பரிமாறுவதற்கு அண்ணனுடைய உத்தரவை எதிர்பார்த்திருக்கிறான். ஆனால் அந்த அண்ணனோ 'எடுத்துப் பரிமாறச் சீதை இல்லையே' என்று சோர்ந்திருக்கிறானாம்.

சீதையின் நினைவுதான். இதைக்காட்டிலும் விநோத நினைவு, 'அந்த நிலையில் விருந்தாளியும் வந்து சேர்ந்து விட்டால் என்ன செய்யப் போகிறாரோ கணவர் ?' என்பது.

இத்தகைய விபரீத எண்ணங்களெல்லாம் இவள் இப்போது கொண்டிருக்கும் மனநோயின் விளைவுதான் :

'அருந்தும் மெல்அட(கு)
ஆர்இட அருந்தும்?' என்(று)
அழுங்கும் ;
'விருந்து கண்டபோ(து)
என்உறு மோ?' என்று
விம்மும் ;

'மருந்தும் உண்டுகொல்
யான்கொண்ட நோய்க்(கு)?'
என்று
மயங்கும்.

[அருந்தும் - காட்டிலே உண்ணுகிற. மெல்அடகு - மென்மையான இலையுணவு முதலியவற்றை. ஆர் இட - யார் பரிமாற. அருந்தும் - சாப்பிடுவார். அழுங்கும் - வருந்துவாள். விருந்து - விருந்தினர். என் உறுமோ-என்ன துன்பப்படுவாரோ. உண்டுகொல்-உண்டோ.]

இன்னும் ஒரு கொடிய விபரீத நினைவு உண்டாகிறது :

பெற்ற தாயரும்
தம்பியும் பெயர்த்தும்வந்(து)
எய்திக்
கொற்ற மாநகர்
கொண்டெழுந் தார்களோ ?

[பெயர்த்தும் வந்து எய்தி - மறுபடியும் வந்து சேர்ந்து. கொற்ற மாநகர் - வெற்றியுள்ள சிறந்த நகரமாகிய அயோத்திக்கு. கொண்டு எழுந்தார்களோ - அழைத்துக் கொண்டு போனார்களோ.]

பரதனும் கைகேயி உள்ளிட்ட தாய்மார்களும் ராமனை அழைத்துப் போக வந்திருந்த அந்தக் காட்சி சீதைக்கு நினைவு வர, அதே நிகழ்ச்சி மறுபடி நிகழ்ந்தது போலவும், இந்தத் தடவை அவர்கள் வெற்றி பெற்று ராமனை அழைத்துக் கொண்டு போய் விட்டது போலவும் ஒரு மயக்கம் ஏற்படுகிறது. ஆனால் உடனே தெளிந்து விடுகிறது.

'நான் முன்பு வாக்களித்தபடி பதினாலு ஆண்டுகள் வனத்தில் தான் கழிப்பேன் என்று பிடிவாதமாகச் சொல்லி விடுவார். நகரத்திற்கு அவர்களுடன் செல்லமாட்டார்' என்பதும் நன்றாகத் தெளிவாக உள்ளத்தில் நிலைத்திருக்கும் நினைவு தான் :

சொற்ற ஆண்டெலாம்
உறைந்தன்றி அந்நகர்
துன்னான்.

[சொற்ற - சொன்ன. உறைந்தன்றி - காட்டில் வசிப்பதல்லாமல். அந்நகர் துன்



குமோ?’’ என்றெல்லாம் துயரப் படுகிறாள்:

உற்ற(து)
உண்(டு) எனாப்
படர்உழந்(து)
உறாதநோய்
உறுவாள்.

[உற்றது உண்டு - நேர்ந்த ஆபத்து ஏதோ இருக்கவேணும். எனா - என்று எண்ணி. படர் உழந்து - துன்பத்தால் வருந்தி. உறாத நோய் - எவரும் எப்போதும் அடைந்திராத மனநோய். உறுவாள் - அடைவாள்.]

னான் - அந்த அயோத்தியா பட்டணத்துக்கு மீண்டு போகமாட்டாரே.]

என்ற நிச்சய புத்தியும் இப்போது ஆறுதல் அளிக்கவில்லை.

சற்றும் ஆறுதல் அளிக்காமல் துன்பத்தை அதிகப்படுத்துகிறது. ‘காட்டுக்கும் போகவில்லையென்றால் காட்டில் தானே இருக்கவேணும்? அப்படியானால் என்னை ஏன் மீட்டுக் கொண்டு போகவில்லை? ஓஹோ, ஒரு வேளை அவருக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்திருக்

போர், நினைவு

ஆபத்து என்ற நினைவு வந்ததும் ஜனஸ்தானத்தில் முன்பு கரன் முதலான பதினாலாயிரம் அரக்கர்கள் போர் செய்ய வந்த கோரக் காட்சி மனக் கண் முன் ஓடி வருகிறது. ஆனால் அது

தான் பூர்ண வெற்றியில் முடிந்துபோன நிகழ்ச்சியாயிற்றே.

தான் நிலைகுலைந்து சோர்ந்து கண்ணீர் நிலத்தில் சிந்த நின்றுகொண்டிருந்ததும், தன் உயிரே இதயத்தி லிருந்து குதித்து வெளியேறி வில்லுங் கையுமாய்ச் சென்றதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டதும், அந்த உயிர் அப்போது இந்த உடலை மறந்து விடாமல் வெற்றி சூடி விரைந்து மீண்டதும், தம்பியும் தானும் அந்த வெற்றி வீரன் காலில் விழுந்து மகிழ்ச்சி தாங்காமல் அழுததும், சீதை ஒருபோதும் மறக்கக் கூடிய நிகழ்ச்சிகள் அல்ல.

என்றாலும் இப்போதுள்ள மனோ வியாதியில் என்ன நடக்கிறது பாருங்கள் :

முரன்ன னத்தகும்
  மொய்ம்பினோர் முன்பொரு—
    தவர்போல்
வரனும் மாயமும்
  வஞ்சமும் வரம்பில
    வல்லோர்
பொரநி கழ்ந்ததோர்
  பூசலுண் டாமெனப்
    பொருமாக்
கரன்ன திர்ந்தது
  கண்டன ளாமெனக்
    கவல்வாள்.

[முரன் எனத்தகும் — போராற்றல் உள்ள முராசுரன் போன்றவர்கள் என்று சொல்லத் தக்க. மொய்ம்பினோர்-தோள் வலிமை யுடையவர்கள். முன் பொருதவர் போல்-முன்னே ஜன ஸ்தானத்தில் போர் செய்தவர்களைப் போல. வரனும்-வரங்களும். வரம்பில-அளவில்லாதன. பொர-போர் செய்ய. நிகழ்ந்ததோர் பூசல்-நிகழ்கிறதாகிய ஒரு யுத்தம். பொருமா-நெஞ்சு பொருமி. கவல்வாள்-கவலைப்படுவாள்.]

கரனொடு சண்டை நடப்பதை இப் பொழுதும் கண்ணுக்கெதிரே பார்க்கிறாளாம். அந்த வெற்றியைத் தான் மறந்து விட்டாளாம். ஒரே கணத்தில் நினைவும் மறதியும். என்ன கொடிய நினைவு, என்ன மிகக் கொடிய மறதி!

கவியா, கல்வியா ?

இந்தச் சோக சித்திரக் காட்சியில் இப் பகுதியைக் கம்பனுடைய கவித்வ சக்தியிலே அறிவுப் போராற்றலின் ஸ்தானத்திற்கு ஒரு நல்ல உதாரணமாய்க் காட்டலாம்.

கம்பனுடைய சிறந்த கட்டங்களில் அற்புதமான கவிதா சக்திக்கு அபரிமிதமான கல்வித் திறனும் அறிவுத் திறனும் இசைந்து உதவுகின்றன என்பது பிரசித்தம். மேலே காட்டிய நினைவு மறதிகளுக்கிடையே, விநோத விபரீத எண்ணங்களுக்கும் மயக்கங்களுக்குமிடையே 'சோகத்தாளாய நங்கை' யைச் சுட்டிக் காட்டும் போது, இங்கே கவித் திறனைக் காட்டிலும் கல்வித் திறனும் அறிவுத் திறனும் கம்பனுக்குப் பணி செய்கின்றன எனக் கூறலாம்.

நினைவின் வெள்ளத்தை அலையலையாகப் பெருக்கிக் காட்டுவது போதிவானர்களான மகா கவிகளுக்கே பொருந்தும் கவித்திறனாகும். இத்தகைய நினைவின் வெள்ளத்திற்கிடையே, 'காய், கனி, கிழங்கு, கீரைகளை நான் பரிமாறாமல் யார் தான் பரிமாறப் போகிறார்? விருந்தாளியை உபசரிப்பது தான் எப்படி?' என்பது போன்ற கருத்தைச் சுழிக்க விடுவதும் திறமையான புலமைக்குச் சான்று.

இந்தப் பகுதியைக் 'கரன் எதிர்ந்தது கண்டனளாமெனக் கவல்வாள்' என்று முடிக்கும் போது, இந்த நினைவு வெள்ளம் பயங்கர வேகத்தில் பாய்வது போலக் காண்கிறது. ஆனால் இது அன்று சுழித்தோடும் வெள்ளத்தின் படுவேகக் காட்சி. அதற்குக் கல்வியோடு பொங்கிவர வேண்டும் அருட்பெருங் கவிதை.

அந்தச் சிறந்த பகுதியை இனிமேல் தான் பார்க்கவேண்டும்.



பி.ஸ்ரீ

419. மானஸக் காட்சிகள்

பகை ஒடுங்கிய விஸ்தார தேசம் — புறப் பகைவரும் இல்லை ; திருடர் முதலான உட்பகைவரும் இல்லை, தெருவிலே போட்டு விட்டாலும், போட்ட போட்ட சாமான்கள் அப்படி அப்படியே கிடக்கும். இந்த மகா ராஜ்யத்திலே மக்கள் எவ்வளவு திருப்தியுடன் சுக வாழ்வு, சுபிட்ச வாழ்வு நடத்துவார்கள் ; ஆட்சி - பீடத்தை எப்படி வாழ்த்துவார்கள் !

காட்சி I

இத்தகைய மகாராஜ்யத்திற்கு ஏகாதிபதியாக, தனிப்பெருந் தலைவனாக, அமர்ந்திருக்கும் பாக்கியம் ராமனுக்குக் கிடைத்திருந்ததே! அதைக் கண்டு பொறுக்க முடியவில்லையாம் கேகய நாட்டிலிருந்து வந்து சேர்ந்திருக்கும் அம்மாளுக்கு.

அவள் ராமனை நோக்கி, ‘இந்த மகா ராஜ்யம் உனக்கு இல்லை; பரதனுக்குத் தான் அப்பா!’ என்று வாய் கூசாமல், தயை தாட்சிண்யம் இல்லாமல், சொல்லி விடுகிறாள்.

ராமனோ கம்பீரமாய் மகத்தான சக்தியுடன் நின்று கேட்டுக் கொண்டிருக்கிறானும். அந்தக் கேகய நாட்டுக் காரியின் கொடுமையை எப்படி ஜயிக்கிறது இந்த ராஜ சிங்கம் தெரியுமா ?

கம்பீர அழகு பொலிந்த முகம், இப்போது மும்மடங்கு பொங்கிப் பொலிகின்றதாம். ‘அன்னையின் ஆசைக்கு இணங்க நம்முடைய அருமைத் தம்பி தான் ஆண்டு அனுபவிக்கட்டுமே இந்தப் பெருஞ் செல்வத்தை!’ என்ற நினைப்பிலே பொங்குகிறது பொலிவு, அகத்திலும் முகத்திலும். இப்படி ஒரு காட்சி : சீதையின் உள்ளத்திலேதான்.

அந்தக் காலத்திலே கைகேயி ராமனைக் காட்டுக்குப் போகச் சொன்ன அந்த நிகழ்ச்சியைச் சீதை நேரில் பார்த்தவளில்லை. எனினும் கரன் முதலான இரக்கமிலா அரக்கர்களின் போரை நேரில் பார்த்ததைக் காட்டிலும் கைகேயி அம்மாளின் ஈவிரக்க மில்லாத கட்டளையையும், ராமன் அதை ஏற்றுக்கொண்ட குதூகலத்தையும் அப்படியே நேரில் கேட்டுப் பார்த்திருந்தவளைப் போலப் பாவித்துக் கொள்கிறாள் இப்போது.

பாருங்கள், அபரிமிதமான உணர்ச்சிப் பெருக்கும் நாடகத் திறனும் சக்தி வாய்ந்த தமிழில் பொங்கி வருவதை :

தெம்ம டங்கிய
 சேணிலம், கைகயர்
தம்ம டந்தை,' உன்
 தம்பிய நாமே'ன,
மும்ம டங்கு
 பொலிந்த முகத்தினன்
வெம்ம டங்கலை
 உன்னி வெதும்புவாள்.

[தெம்மடங்கிய — பகை ஒடுங்கிய. சேண் நிலம் — விஸ்தாரமான ராஜ்யம். கைகயர் தம்மடந்தை — கைகேயி. வெம் மடங்கலை — கொடிய ராஜசிங்கம் போன்ற ராமனை. உன்னி — நினைத்து.]

கைகேயியை எவ்வளவு அன்னியமாகக் கருதுகிறாள் சீதை, 'கைகயர் தம் மடந்தை' எனக் குறிப்பிடும்போது!

அந்தக் கைகேயியின் சூழ்ச்சி அறவே முறியடிக்கப்பட்டதாம்; 'மும்மடங்கு பொலிந்த முகத்'திற்கு முற்றும் தோற்றுப் போய் விட்டதாம். அந்த வெற்றியின் அழகு, அந்த அழகின் மும்மடங்கு வளர்ச்சி, சீதையை இப்போது என்ன பாடு படுத்துகிறது!

[மெய்த் திருப்பதம்—நல் வழியிலே, சத்திய வழியிலே, கிடைத்த செல்வமாகிய பதவி. மேவு என்ற போதினும் — 'நீ அடைவாயாக' என்று தசரத சக்ரவர்த்தி சொன்ன காலத்திலும். இத் திருத் துறந்து— இந்த மெய்த் திருவாகிய செல்வத்தைத் துறந்து. ஏகு என்ற போதினும்—'போ காட்டுக்கு' என்று கைகேயி சொன்ன காலத்திலும். சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை—மலர்ந்திருப்பது போலச் சித்திரிக்கப்பெற்றிருக்கும் செந்தாமரைப் பூ. உன்னுவாள் — நினைப்பாள்.]

'குழந்தாய், அதோ அந்தச் சிங்காசனத்தில் போய் உட்கார்ந்து கொள்' என்கிறாராம் தசரத சக்ரவர்த்தி. ராமன் போகிறான் சிங்காசனத்திலே உட்கார. அவன் உட்காரும் தருணத்தில் கைகேயி குறுக்கிட்டு, 'இத்திருத் துறந்து ஓடு காட்டுக்கு' என்கிறாளாம். தூங்குகிறவனை எழுப்பி 'உனக்குச் சோறு இல்லை' என்பது போலே! ராமனோ அப்போதும் இப்போதும் அகமகிழ்ச்சியும் முக மலர்ச்சியுமாகவே யிருக்கிறான்.

இந்த ரீதியில் நினைவு வெள்ளம் பின்னோக்கிப் பாய்கிறது கொடிய வேகத்திலே:

'மெய்த்தி
 ருப்பதம்
மேவென்ற
 போதினும்,
'இத்தி
 ருத்துறந்(து)
ஏகென்ற
 போதினும்,
சித்தி
 ரத்தின்
அலர்ந்தசெந்
 தாமரை
ஒத்தி
 ருக்கும்
முகத்தினை
 உன்னுவாள்.



பெர்னுர்ட் ஷா செல்வத்தை 'வெல்த்' (Wealth) 'இல்த்' (Illth) என இரு வகையாகப் பிரித்துப் பேசினுர். நல்ல வழியில் வாமல் தவருன வழிகளிலே தேடிக் குவிக்கப்படும் ஐசுவரியத்தை 'வெல்த்' என்று கூறுவதற்கு மாருக 'இல்த்' என்று குறிப்பிடுவதே பொருத்தம் என்றுர். அந்த ரீதியில் கம்பனும் தம் காவியநாயகி வாயிலாக ராமராஜ்யச் செல்வத்தை 'மெய்த்திரு' என்றும், ராவண ராஜ்யச் செல்வத்தைப் 'பொய்த்திரு' என்றும் குறிப்பிடுகிருன்.

ராமனுடைய திருமுகத்தை 'அப்பொழுது அலர்ந்த செந்தாமரை' என்று அயோத்தியா காண்டத்தில் கவிக் கூற்ருகக் குறிப்பிட்டவன், இங்கே காவிய நாயகியின் கூற்ருகச் 'சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை' எனக் குறிப்பிடுவதைப் பாருங்கள்.

இயற்கையில் மலர்ந்து வாடிப்போகும் செந்தாமரை அல்ல. சித்திரத்திலே எழுதிய செந்தாமரையும் அல்ல! இயற்கையாக ஜீவசக்தியுடன் மலர்வதுபோல் சித்திரத்திலே ஓவிய உயிர் பெற்று வாட்டமே அறியாது மலர்ந்திருக்கும் செந்தாமரையை ஒப்புக் கூறுவது கவனிக்கத் தக்கது. கம்ப சித்திரங்களுக்கே ஓர் அறிகுறி 'சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை'.

இந்தப் பாட்டிலும் இதற்கு முந்திய பாட்டிலும் கல்வித் திறனைக் கடந்து பொங்கும் சிருஷ்டி சக்தியைக் காண்கிருேம்.

'மெய்த்திருப் பதம்' என்று தொடங்கும் பாட்டிலே தமிழின் அபூர்வ எளிமையைத் தான் என்னென்பது? சிரஞ்சீவி இலக்கியத்திற்கு உரிய ஜீவபாஷை இது. கருத்தைச் சிறிதும் மறைக்காமல் அப்படியே காட்டுகிறது. மொழித் திரை விலகி நடந்தது நடந்தபடியே அகக் கண்ணுக்கு இலக்காகி விடுகிறது.



காட்சி II

இனி, வேருெரு காட்சிக்கு விரைந்து ஓடுகிறது சீதையின் நினைவு:

தேங்கு கங்கைத்
  திருமுடிச் செங்கணுன்
வாங்கு கோல
  வடவரை வார்சிலே
ஏங்கும் மாத்திரத்(து)
  இற்(று)இரன் டாய்விழ,
வீங்கு தோளே
  நினைந்து மெலிந்துளாள்.

[தேங்கு — தேக்கமாகத் தங்கிய. திருமுடி — அழகிய ஜடாமுடி. செங்கணுன் — மூன்று கண்களும் ஒருங்கே கோபத்தால் சிவப்பேறிய சிவபெருமான். வாங்கு — வளைந்த. கோல வடவரை வார்சிலே — அழகிய மேரு மலே போன்ற நீண்ட வில். ஏங்கும் மாத்திரத்து — 'இந்த வில்லேயாவது, வளைப்பதாவது' என்று ஜனகனும் பிறரும் ஏங்கியிருந்த போது. இற்று-முறிந்து. வீங்கு தோளே — பூரித்துப் பருத்தெழுந்த தோளே.]

நாடு இழந்து காடு நோக்கிய அந்தக் காட்சியிலிருந்து எவ்வளவு வேகமாய்ப் பின்னோக்கி ஓடுகிறது நினைவின் வெள்ளம்! அந்தக் கல்யாணத்தையும் தாண்டிக் குதித்து முன்னே நிற்கிறது.

அந்தத் திருமணம்தான் நாட்டுப் பெண்களுக்கு நடைபெறுகின்ற திருமணம் போல் நடைபெற்றதா? மலை போன்ற இடையூறு குறுக்கிடவில்லையா சிவதனுசின் வடிவத்திலே? கன்னியா சுல்கம் நித்திய கன்னிகையாக்கி விடுமோ என்று கூடப் பயமுறுத்த வில்லையா?

மலை போன்ற வில்லைக் கொண்டு வந்து மாப்பிள்ளை முன்னே போடச் செய்கிறார், கள்ளமிலா வெள்ளை மனத்து மாமனார். பார்த்தவர்கள் ஏங்கிப்போகிறார்கள். ஆனால் அந்த ஏக்கம் நீடிக்கவில்லை. ஏங்கியது ஒரு கணம், அடுத்த கணமே வீங்குகிறது வீரத்தோள்—வில் முறிந்து இரண்டு துண்டாக விழுமாறு. அந்தப் பூரித்த தோளை நினைத்துப் பார்த்துப் பூரித்த காலமும் உண்டு. இப்போதோ மெலிந்து போகிறாளாம் சீதை.

காட்சி III

மறுபடி மனோபாவம் காட்டுக்கே ஓடப் பார்க்கிறது. கங்கைக் கரைக்கு வந்துவிடுகிறது. ஆழநீர்க் கங்கையாற்றைக் குகனுடைய தோணியில் கடந்து போகிறது.

தோணியிலிருந்து ராமனும் சீதையும் லட்சுமணனும் இறங்கி அக்கரைக்கு வருகிறார்கள், குகனும் கரையில் வந்து நிற்கிறான். அப்போது நடப்பதென்ன? அப்படியே கண்முன் வருகிறது, இப்போதுதான் நடப்பது போலே:

ஆழ நீர்க்கங்கை
  அம்பி கடாவிய
ஏழை வேடனுக்(கு),
  'எம்பிநின் தம்பி; நீ
தோழன்; மங்கை
  கொழுந்தி' எனச்சொன்ன
வாழி நண்பினை
  உன்னி மயங்குவாள்.

[அம்பி - தோணி, கடாவிய - செலுத்திய. எம்பி - என் தம்பி. நின் - உனது. மங்கை - (இங்கே) சீதை. கொழுந்தி - மைத்துனி. நண்பினை - நட்பினை; சிநேகத்தை. உன்னி - நினைத்து.]

'அன்பு தூரத்தைச் சமீபமாக்கி, அன்னியனைச் சகோதரனாக்கி விட்டது' என்று சொல்லி ரவீந்திரநாத தாகுர், தமக்கு நோபல் பரிசு வழங்கிய அன்பினை வாழ்த்தினார். இங்கே காவிய நாயகி வாயிலாகக் கவிஞன் அத்தகைய நட்புக் காதலை வாழ்த்துகிறான்.

இந்த உறவுமுறை, இந்தத் தோழமை, முதல் முதல் உதித்தது திருமங்கையாழ்வாரின் உள்ளத்திலே:

ஏழை, ஏதலன்,
  கீழ்மகன் என்னா(து)
  இரங்கி மற்(று) அவற்(கு)
  இன்னருள் சுரந்து,
'மாழை மான்மட
  நோக்கி உன்தோழி;
  உம்பி எம்பிஎன்(று)
  ஒழிந்திலை; உகந்து
தோழன் நீஎனக்(கு)
  இங்கொழி' என்ற
  சொற்கள் வந்(து)அடி—
  யேன்மனத்(து) இருந்திட,
ஆழி வண்ணா! நின்
  அடியிணை அடைந்தேன்,
  அணிபொழில்திரு
  அரங்கத்(து)அம் மானே!

[ஏதலன் — அன்னியன். மாழை — இளமை. மாழை மான்மட நோக்கி — சீதை. ஆழி வண்ணன் — கடலின் நீல நிறம் வாய்ந்தவன். அணி பொழில் — அழகிய சோலை. அம்மானே—அப்பனே.]

இந்தத் தோழமையைப் பெரியாழ்வார், 'சீரணிந்த தோழமை' என்று குறிப்பிடுகிறார்.

திருமங்கையாழ்வார் வாக்கிலே, 'தோழன் நீ' என்று ராமன் சொன்ன அந்தத் தோழமை தான் சிகரமாக அமைந்திருக்கிறது. கம்பனுடைய காவிய நாயகியின் வாக்கிலோ, 'மங்கை கொழுந்தி' என்று சீதையும் உறவாக்கப்பெற்றதே 'சீரணிந்த தோழமை' யாகக் காட்சி யளிக்கிறது.




பி.ஸ்ரீ

420. கேட்டதும் கண்டதும்

கணவனோடு வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் நடந்த சில நிகழ்ச்சிகள், சிறையிலே மரணத் துன்பம் அனுபவித்துக் கொண்டிருக்கும் சீதையுள்ளத்திலே சலனப்படக் காட்சிகள் போலத் தோன்றித் தோன்றி மறைகின்றன.

காடு துறந்து காட்டுக்குப் புறப்பட நேர்ந்த அந்த முக்கிய நிகழ்ச்சி, ஒன்றோடொன்று சற்று முரண்பட்ட இரு படமாகி அகக்கண் முன் வருகின்றது. கைகேயி சூழ்ச்சியும், அதைத் தனக்கே வெற்றியாக்கிக் கொண்ட அந்த 'மும்மடங்கு பொலிந்த முக'மும், பிறகு சித்திரத்திலே கலைச்சுவையுடன் மலர்ந்த செந்தாமரை போன்ற அந்த முக பாக்கியமும் தோன்றி உள்ளத்தை, சிந்தனைகளை, வெதுப்புகின்றன.



வில்லை முறித்த வீரத் தோளும் வீங்கி வெதுப்பி மெலிவிக்கின்றது சீதையுள்ளத்தை.

இந்தக் காட்சிகளைச் சீதை நேரில் பார்க்கவில்லை. பிறர் சொல்லக் கேட்ட விஷயங்களைத் தான் மனோபாவம் எழுதிக் காட்டுகிறது; அல்லது உருக்கி வார்த்து உருவாக்குகிறது.

சீதை நேரில் பார்த்து அனுபவித்த நிகழ்ச்சிகளோ இன்னும் எவ்வளவோ தெளிவான மானஸ உருவங்களாக ஓடி வருகின்றன.

நட்பும் சகோதர தர்மமும்
(இரு தம்பியர்)

இத்தகைய நிகழ்ச்சிகளில் ஒன்றை ஏற்கெனவே கண்டிருக்கிறோம். அது தான் பரம ஏழையும், 'கீழ் மகன்' என்று ஒதுக்கப்பட்டவனுமாகிய குகனோடு ராமன் கொண்ட 'சீரணிந்த தோழமை'க் காட்சி.

'அந்தத் தோழனுக்கு என்னையும் கொழுந்தியாளாக அறிமுகப்படுத்தினாரே!' என்ற அந்த நினைப்பை, அந்த நட்புக் காதலை, ஓர் அரும் பெரும் பொக்கிஷமாய்ப் போற்றுகிறது சீதையுள்ளம். 'அத்தகைய நட்பு வாழி' என்று சீதா தேவியே வாழ்த்துவது போல் அமைந்திருக்கிறது 'ஆழ நீர்க் கங்கை' எனத் தொடங்கும் அருமைப் பாட்டு.

அந்தக் காட்சியிலேயே இப்போது சீதை மோகித்து மூர்ச்சித்துப் போய் விடுவாளோ எனத் தோன்றுகிறது. ஆனால் பளிச்சென்று வேறொரு படக் காட்சி தோன்றி விடுகிறது.

காட்டுத் தம்பி மறைந்து, வேறொரு தம்பி — நாட்டுத் தம்பி — தோன்றுகிறான், அண்ணனைப் போல் மரவுரியும் சடையுமாய்த் தோன்றுகிறான்.

பொன் முடி எங்கே!

ராமனைக் காட்டிலிருந்து திருப்பி அழைத்துக் கொண்டு போய் முடி சூட்ட வேண்டுமென்னும் கருத்துக் கொண்டு பரதன் சித்திரகூடத்திற்கு வந்து சேர்ந்த அந்தக் காட்சி தான். தன்னைப் போலவே முடி துறந்து சடை திரித்து வந்த அருமைத் தம்பியை ராமன் பர்ணசாலைக்கு அழைத்துப் போனான். சீதை அங்கே தனிமையாக இருந்தாள்.

பரதனைக் கண்டதும் சீதை இரக்கப் பட்டாள். 'பொன்முடி இல்லையே தம்பி தலைமேல்' என்றுதான்.

'இந்தத் தலைக்கும் அந்தக் கிரீடம் சிறப்பாகப் பொருந்தக் கூடியது தானே' என்று எண்ணினாள். அண்ணன் துறந்த அந்த முடியை இந்தத் தம்பி யாவது சூடிக் கொள்ளலாகாதா?

இளமை சொட்டுகிறது, களை சொட்டுகிறது பரதன் முகத்திலே. அழகிலும் குணத்திலும் ராமனை ஒத்தவன். பூச் சூட்டிப் பொன் முடியும் சூட்டிக் கொள்ள வேண்டிய தலைக்குச் சடை முடியா தலைவிதி?

அந்தக் கிரீடத்தைச் சீதை 'உரிமை சால் வரங்கொள் பொன்முடி' என்று கூட நினைத்து விட்டாளாம். 'உரிமை பொருந்திய பொன்முடி; கைகேயி கொண்ட வரத்தால் பரதனுக்கு உரிமையாகிவிட்ட கிரீடம்' என்று பொருள்.

அத்தகைய மகுடத்தைத் தரித்துக் கொண்டு வராமல்—என்ன பைத்தியம்!—சடை திரித்துச் சடாமகுடமாய்க் கட்டிக் கொண்டு வந்து விட்டானே, இது என்ன வினை?

'இவனாகச் செய்து கொண்ட வினை தான்!' என்று இரங்கினாள், ஏங்கினாள் சீதை.

அந்தக் காட்சி இப்போதும் -- இந்த அசோக வனச் சிறைக்குள்ளும் -- ஓடி வருகிறது எண்ண அலைகளின் மீது, கடலலைகள் மீது ஒரு படகு வருவது போல:

உரங்கொள் தேமலர்ச்
  சென்னி உரிமைசால்
வரங்கொள் பொன்முடி
  தம்பி வனைந்திலன்,
திரங்கு செஞ்சடை
  கட்டிய செய்வினைக்(கு)
இரங்கி ஏங்குவ(து)
  எண்ணி இரங்குவாள்.

[உரம்கொள் - சிறப்புக்கொண்ட. தேமலர் - இனிய பூக்களைச் சூடிக் கொள்ளத்தக்க. சென்னி - தலையில் தரிப்பதற்கு. உரிமை சால் - உரிமை பொருந்திய. வரம் கொள் - கைகேயி வரத்தினால் கொண்ட. வனைந்திலன் - அழகுபெறச் சூடிக் கொள்ளாதவனாய். திரங்கு - திரித்து விட்ட. செய் வினை - தானாகச் செய்து கொண்ட வினைக்காக.

இரங்கி ஏங்குவது - தான் மனமிரங்கி அன்று ஏங்கிப் போனதை. எண்ணி இரங்குவாள் - இப்போதும் எண்ணி இரக்கப்படுவாள்.]

பரதனுடைய இந்த நிலையைச் சீதை துளியும் எதிர்பார்த்ததில்லை. அண்ணன் காடு சென்றதற்காக நற்குணங்களில் சிறந்த பரதன் பெரிதும் வருந்தி யிருப்பான் என்று எதிர்பார்த்திருந்தாள்.

பிறகு காலடைவில் ஒருவாறு மனம் தேறி வசிஷ்டர் முதலானவர்களின் வற்புறுத்தலுக்கு இணங்கி, நாட்டு மக்களின் அநாத நிலைக்கு இரங்கி முடி சூடியிருப்பான் என்று தான் எண்ணி யிருப்பாள்.

அந்தப் 'பொன்முடி தம்பி வனைந்திலன்' என நேரில் கண்ணெதிரே கண்டு கொண்டதும், கைகேயி வரத்தால் கவர்ந்து கொண்ட முடியும் 'உரிமைசால் வரங்கொள் பொன்முடி'யாகி விடுகிறது.

உரங்கொள் தேமலர்ச்
சென்னி உரிமைசால்
வரங்கொள் பொன்முடி

என்று எவ்வளவு அனுதாபத்துடன் மனப்பூர்வமாக அம்முடியைப் பரதனுக்கு உரிமையாக்குகிறாள்!

ராமன் முடி இழந்து சடைமுடி கட்டியிருப்பது ஊழ்வினையென்றால், அவனைப் போன்ற பரதனும் அவனைப் போலவே முடி துறந்து சடைமுடி கட்டியது செய்வினை என்கிறான்.


பரஸ்பர அனுதாபம்

இந்தக் காட்சி அயோத்தியா காண்டத்தில் பரதன் சீதையைப் பர்ணசாலையில் சந்தித்த அந்த சந்தர்ப்பத்திலே கூறப்படவில்லை.

ராமன் பரதனை அழைத்துக் கொண்டு சீதையிருந்த 'இலைக் குடிசை'க்கு (பர்ணசாலைக்கு)ச் சென்றதும் சீதையின் நிலை கண்டு பரதன் வருந்துவது தான் அங்கே பிரஸ்தாபிக்கப்படுகிறது.

அந்தக் காட்சிதான் எவ்வளவு சொற்செட்டுடன் சித்திரிக்கப்படுகிறது:

எய்திய வேலையில்,
தமியள் எய்திய
நையலை நோக்கினன்,
சாலை நோக்கினுன்,



கைகளிற் கண்மலர்
புடைத்துக் கால்மிசை
ஐயன்அப் பரதன்விழ்ந்(து)
அரற்றி னன்அரோ.

[எய்திய வேலையில் — அடைந்த சமயத்தில். தமியள் எய்திய — தோழியரின்றி, பணிப் பெண்ணுமின்றி, வேறு துணையின்றித் தனித்தவளாய் வந்த. தையலை நோக்கினன் — ராணியையா கண்டான்? சாமானிய ஏழைப் பெண்ணைத்தான் கண்டான்! சாலை நோக்கினன் — அரண்மனையையா கண்டான்? அந்தக் குடிசையின் எளிமையைத் தான் கண்டான். கண்மலர் — ஒரு கள்ளமும் அறியாத தூய உள்ளத்தின் சாளர வாசலாகிய கண்கள். கால்மிசை— சிதையின் கால்களில்.]

அவ்வளவு தூரம் பரதனின் நெடுந் துயரத்தை வருணித்த கவிஞன், அதே சமயம் அப்பரதனின் எளிமை கண்டு சிதை வருந்தியதைச் சித்திரிக்காமலே வாசகர் உய்த்துணருமாறு விட்டு விட்டான்.

தசரத சக்ரவர்த்தி இறந்த செய்தி கேட்ட சிதையின் அந்த நெடுந் துயரத்தை வருணிக்க வேண்டியிருந்ததல்லவா?

அப்படிக் கலைச்சுவைக்கு இசைய அங்கே உய்த்துணருமாறு விட்ட காட்சிதான் எவ்வளவு வசிகரமாகச் சுந்தர காண்டத்தில் ஒரு படக் காட்சியாக வருகிறது!

ஒரு ஹாஸ்ய மின்வெட்டு

இத்தகைய முக்கியமான காட்சிகளோடு, காட்டுக்குப் புறப்படும் சமயத்தில் அவ்வளவு சோகத்திற்கிடையே நிகழ்ந்த ஒரு ஹாஸ்யக் காட்சியும் மனக் கண்முன் ஓடி வருகிறது.

வனவாசத்தை முன்னிட்டு ராமன் இளவரசாகிய தன் வசமிருந்த பொருள்களை யெல்லாம் விரும்பி வந்தவர்களுக்கு வாரி வாரி வழங்கிக் கொண்டிருந்தான். கடைசியாகச் சில வைதிகர்கள் யாசகத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

மிஞ்சியிருந்த பசுக்களை ராமன் அவர்களுக்குப் பரிசாகக் கொடுத்தான்.

வேறொரு பொருளும் இடையாது ராமன் வசமாக. எளிய வாழ்க்கையை மேற்கொண்ட வேதியர்களுக்குப் பசுக்கள் போதுமென்று எண்ணினான்.

ஆனால் அந்த யாசகர்களோ அவ்வளவு லேசாக அவனை விட்டு விட விரும்பவில்லையாம்.

'இன்னும் ஏதாவது கிடைக்காதா?' என்று ஏற இறங்கப் பார்த்தார்கள். ராமன் உடம்பிலோ மரவுரி தவிர ஆபரணம் இரத்தினம் ஒன்றும் காணப்படவில்லை.

அச்சமயம் அந்த வைதிகர்கள் பார்த்த பார்வையாகிய ஜன்னல் வழியாக ராமன் அவர்கள் உள்ளத்தையே பார்த்து விட்டான்.

இக் காட்சியையும், பின்பு என்ன நடந்தது என்பதையும், நாமும் இந்தக் கவியாகிய சாளரத்தின் வழியாகப் பார்த்து விடலாம்:

பரித்த செல்வம்
ஒழியப் படரும்நாள்,
அருத்தி வேதியர்க்(கு)
ஆன்குலம் ஈந்(து),அவர்
கருத்தின் ஆசைக்
கரையின்மை கண்(டு)இறை
சிரித்த செய்கை
நினைத்(து)அழும் செய்கையாள்

[பரித்த—தாங்குவதற்கு உரிமையான. படரும் — (காடு) செல்லும். அருத்தி — ஆசை. ஆன் குலம் — பசுக்கூட்டம். இறை — கொஞ்சம்.]

எவ்வளவு பேராசை அந்த வைதிக உள்ளங்களில் கடல் போலப் பொங்கி அவர்களுடைய முகத்திலும் கண்களிலும் அலையெறிந்து கொண்டிருந்தது! ராமனுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

நாகரிகமாக அடக்கிக்கொள்ள முயன்றான். முயன்றும் அடக்க முடியாமல் கொஞ்சமாகச் சிரித்து விட்டானாம்.

சிதை உடனிருந்து அனுபவித்த காட்சி இது.